Registered No. M. 2330 'SIDDHANTHAM
Vol. 25—No. 9

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 25 | நந்தன புரட்டாசி 1952 செப்டேம்பர் | இதழ்


உள்ளுறை

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.


உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15



அணியண்ணுமலையார் முன்கோபுர வாயில்



மாணிக்கவாசகப்பெருமான் கோயில்.
இதன் பின்னுல் பொய்கை உண்டு.

[இவை அணியண்ணுமலை கட்டுரையை விளக்குபவை.
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தம் உதவியவை.]

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 25 | நந்தன புரட்டாசி 1952 செப்டெம்பர் | இதழ் 9

நாட்டு ஒலி

1. ஆறு நூற்றண்டுகளின்முன்

இன்றைக்கு ஆறு நூற்றுண்டுகளின் முன் நடுப் பாண்டிநாட்டிலே ஒரு சரித்திர சம்பவம் நடந்தது. அது அந்த நாட்டை அலங்கோலப் படுத்திவிட்டது. அதனை நாட்டு மக்கள் முற்றும் மறந்தார்கள். ஆனால் அச்சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கோயிற் கற்கள் மட்டும் அவ்வரலாற்றைத் தம் பேரில் தீட்டப் பெற்றுக் கொண்டு தற்போதும் அச்செய்தியை நமக்கு ஒப்புவிக்கின்றன. அதனை ஒரு சிறிது தெரியப் படுத்துவோம்.

தேனாறு பாயும் நாட்டில் குன்றக்குடி என்ற ஒரு முருகப்பிரான் திருமலை ஒன்று இருக்கிறது. அதனைச் சுற்றிப் பல பாண்டி நாட்டுத் திருத்தலங்கள் இருக்கின்றன. நகரத்து வணிகப் பெருமக்கள் வணங்குகிற ஒன்பது பெருங்கோயில்களும் அதனைச் சுற்றியே இருக்கின்றன. மேலும் திருப்புத்தூர், பிரான்மலை (முதுகுன்றம்), காளையார்கோயில் (கானப்பேர்) முதலிய பாடல் பெற்ற தலங்களும் அருகே இருக்கின்றன. இத்தனைப் பெருமை பெற்ற தலங்களிலே ஆறு நூற்றுண்டுகளுக்கு முன் திடுக்கிடத்தக்க ஒரு படையெடுப்பு நேர்ந்தது. அதனால் தமிழ் நாட்டுச் சரிதப் போக்கு ஒருவாறு மாறிவிட்டது.

வடக்கே டெல்லியில் கில்ஜிவமிசம் ஆண்டு கொண்டு இருந்தது. அதில் அலாவுத்தீன் என்ற ஒரு கொடிய

மன்னன் பேராசை பிடித்தவனாய் தென் நாடுகள் மீது படை யெடுத்துக் கொள்ளை யடித்தான். அவன் கொண்டு சென்ற கொள்ளை போதாது என்று எண்ணித் தன் தளகர்த்தனான மாலிக் காபுர் என்ற ஒருகொடியவனை அனுப்பித் தென் நாடுகள் எல்லாவற்றையும் சூறை ஆடினான். அப்போது பல அரசுகளும் கோயில்களும் அழிந்தன. பிறகு பட்டத்திற்கு வந்த முகம்மது துக்லாக் என்ற ஒரு வெறியன் காலத்தில் மதுரையில் பிரதிநிதியாக ஒரு கொடிய நவாப்பு நியமிக்கப் பெற்றான். அவனுடைய வம்சம் 1335 முதல் 1378 வரை ஆட்சி புரிந்தது. அந்த வம்சத்து அரசர்கள் செய்த கொடுமைகளுக்கு அளவில்லை. அதன்பின் கருநாடகத்தில் விஜயநகரம் தோன்றி அதன் இளவரசன் கம்பண்ண உடையார் தென் நாட்டில் படையெடுத்து மதுரையில் இருந்த கொடியவனை நீக்கிவிட்டு மதுரையைக் காப்பாற்றினான். அதுமுதல் தென்னாடு இந்து அரசர்கள் வசம் வந்தது. முகம்மதியர்கள் மதுரையை ஆண்ட காலத்தில் பாண்டிய நாட்டிலிருந்த சிறந்த கோயில்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. உருவங்கள் பின்னப் படுத்தப்பட்டன. திருப்பணி வேலைக் கற்கள் தகர்க்கப்பட்டன. இப்படி அழிந்த இடங்களில் சூரைக்குடி, ஆதனூர், திருப்புத்தூர் முதலிய தலங்களுமாகும். குடிமக்களும் பயந்து ஓடி விட்டார்கள். இறுதியில் மதுரையின் முகம்மதிய அரசு தொலைந்து போக சூரைக்குடியில் இருந்த ஒரு வீரத்தலைவன் விசயாலயத்தேவன் என்பவன் கோயிலைப் புனருத்தாரணம் செய்து, குடிகளுக்கு அபயம் தந்து காப்பாற்றினான். இவ்வாறு செய்த புனிதச் செயலுக்காக அவனுக்கும் அவன் வம்சத்தார்க்கும் அந்நாட்டு மக்கள் நிரந்தரமான இறைகள் கொடுத்து வந்தார்கள். இந்தச் செய்தியைத் திருப்புத்தூர்க் கோயிற் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. விசயாலயத்தேவர் வமிசமும் குறுநில மன்னர்களாக 1378 முதல் 1608 வரை ஆண்டுவந்தது என்று அந்தப் பக்கத்துக் கால்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வகையில் திருப்பணிசெய்ததை சூரைக்குடிப்புராணமும் விசயாலயதேவன் திருப்பணிப்படலம் என்ற ஒரு படலத்தில் கூறுகிறது.

அந்த வமிசத்து அரசர்களின் உருவங்களும் சூரைக்குடி வன்னியர் கோயிலில் தூண்களில் செதுக்கப்பட்டிருக்

கின்றன. இச்செய்தி ஒரு சரிதசம்பந்தமான ஒரு வரலாற்றுப்பகுதி என்று அறியவேண்டும். இதனைக் கூறும் கல்வெட்டுப் பகுதிகளை இன்றைக்கும் செட்டி நாட்டுக்கோயில்களில் காணலாம்.

2. தற்போது நடப்பது

பிறகு ஆறு நூற்றுண்டுகள் சென்றன. முகம்மதியக் கொடுமைகளை நீக்கிக் கோயில்களைத் திருப்பணி செய்த விசயாலயத்தேவன் வரலாற்றைப் பொதுமக்கள் மறந்தார்கள். ஆனால் அக்கோயில்கள் அவனுடைய புனிதச் செயலால் இன்றும் சிறப்புற்றிருக்கின்றன. அந்நாட்டில் குன்றக்குடி, திருப்புத்தூர், திருக்கோளக்குடி என்ற அருமையான கோயில்கள் தற்போது திருவண்ணாமலை ஆதீனத்தின் பராமரிப்பில் காப்பாற்றப்படுகின்றன. ஆதீனத்துச் சந்நிதானங்களும் அக்கோயில் பராமரிப்புக்களில் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படியிருக்கையில் கோயில்களுக்கும் சைவசமயத்திற்கும் மீண்டும் ஒரு தூமகேது தோன்றி அவற்றை அழிக்கத் தொடங்குகிறது. முன்னாளில் பிறநாட்டு வேற்றுச் சமயமான முசுலிம் சமயம் அழித்தது. இந்நாளிலே உள்நாட்டில் முளைத்திருக்கும் தன்மதிப்புப் பெயர் கொண்ட ஓர் இயக்கம் இவைகளுக்குப் பகையாகத் தோன்றியிருக்கிறது. முன்னாளில் பிறசமயம் அழித்தாற்போல் இந்நாளில் இவ்வியக்கம் அழித்து விடுவதாகப் பயமுறுத்துகின்றது.

ஆறுநூற்றாண்டுகளின் முன் சமயத்தையும் சமய நிலையங்களையும்பாதுகாத்த விசயாலயனைப்போல் தற்காலத்தில் குன்றக்குடி ஆதீனத்தலைவர் தோன்றியிருக்கிறார். அவர் தன்மதிப்புத் தலைவர் இட்டுவருகிற கூச்சல்களை அடக்குவதற்கு வீரக்கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார். முதலில் மறுப்பு ஒன்று வெளியிட்டார். பிறகு கூட்டம் கூட்டினார். அதிலே ஒரு பாதுக்காப்புக் கழகம் நிறுவினார். இனி செயல் முறையில் இறங்குகிறார். ஆறுநூற்றுண்டுகளின் போது நடந்து நிறைவேறின வெற்றியைப் போல் இப்போதும் நிறைவேறும் என்பதில் ஐயம் இல்லை. சமயப் பெரியார்கள் உதவியாக நிற்பதாக வாக்களித்துள்ளார்கள்.

பொதுமக்களும் துணையாக இருக்க விரும்புகிறார்கள். இந்த முறையில் தமிழ்நாடு முழுதும் ஓர் உணர்ச்சி தோன்றியிருக்கிறது. அரசியல் கட்சியாகத் தோன்றியிருக்கும் தன்மதிப்பு இயக்கம் சமயத்துறையில் நுழைய வொட்டாமல், சமயத்தைப் பாதுகாப்பது நாட்டுத்தலைவர்களின் கடமை அன்றோ? அதனையே செய்ய ஆதீனம் முன் வந்திருக்கிறது.

3. படர்ந்துவரும் தீக்குரல்

சில ஆண்டுகளாக தலைவிரித்து ஆடிக்கொண்டு வருகிற தன்மதிப்பு இயக்கம் முதலில் அரசியலில் பிறந்தது. அதில் மக்களின் கவனத்தை இழுக்க முடியவில்லை. அதில் தோல்வியுறவே இலக்கியத்தில் புகுந்தது. வடநாட்டுக் கதையாகிய இராமன் கதையைத் தென் நாட்டிற்குக் கொண்டுவந்து தமிழைக் கெடுத்ததாகக் கம்பரை இகழ்ந்தது. ஆர்வத்தின் மிகுதியாலே தமிழனை கம்பரை வெறுத்து வடமொழிப்புலவரான வால்மீகியைப் புகழ்ந்தது. வெறுத்தது மட்டும் அன்றிக் கம்பருடைய நூலை எரிக்கவேண்டும் என்று தூற்றிற்று. சில நூல்கள் எரித்ததினாலே நூலே மறைந்து போகுமா? அந்நூலை வாசியாதவர்கள் எல்லாம் வாசிக்கத் தொடங்கினார்கள். நூல் பதிப்புக்கள் அதிகமாயின. நூலுக்கு என்றுமில்லாத மதிப்பு ஏற்பட்டது. அந்நூலைப்பற்றிக் கணக்கற்ற கட்டுரைகளும் விளக்கங்களும் தோன்றின. ஆகவே இயக்கம் எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்ததோ அதற்கு மாறாக எதிர்வாதம் வலுத்தது. அதில் தோல்வியுற்ற பிறகு சைவசமய நூலாகிய பெரிய புராணத்தைத் தூற்றவும் எரிக்கவும் தூண்டமுன்வந்தது. 10 நூற்றாண்டுகளாக மக்களை நல் வழிப்படுத்தின அந்நூல் அத்தனை எளிதில் மறையுமா? நூலை வாசியாதவர்கள்கூட வாசிக்கத்தொடங்கினார்கள். அதிலும் இயக்கம் தோல்வியுற்றது. அவ்வியக்கம் மீண்டும் அரசியலில் புகுந்து வடநாட்டார் ஆக்கிரமத்தைத் தடை செய்ய முயன்றது. அவர்கள் மொழியை ஒழிக்கப் பிரசாரம் செய்தது. அது சரியான வழியில் இயங்கியிருந்தால் வெற்றி பெற்றிருக்கக் கூடும். ஆனால் செய்யத் தெரியாத முறையில் சிறுபிள்ளைத்தனத்

தில் வேலை செய்ததினுல் அதுவும் தோல்வியுற்றது. இருப்புப்பாதை நிலையங்களில் உள்ள இந்திப் பெயர்களை அழிக்க முயன்றது. அரசியலோ அதனைக் கவனிக்கவில்லை. 'குழந்தைகள் மணல் வீடுகளைக் கட்டி அழித்து விளையாடட்டுமே' என்று பராமுகமாக விட்டுவிட்டது. இயக்கத் தலைவர்களுக்குத் தோல்வியும் அதனுல் கோபமும் வந்தது. உடனே அந்தக் கோபத்தைத் தேவாரம், திருவாசகம் இவைகளின் மீது விடத்தொடங்கினுர்கள். தமிழ் இசைக்கு ஒப்பற்ற பெருமை தருவது தேவாரங்கள் என்ற மன எழுச்சியும் இன்றி இவ்வாறு பேசத் தொடங்கினுர்கள். போதாக் குறைக்குக் கோயிலில் உள்ள திரு உருவங்களை உடைக்கவேண்டும் என்ருர்கள். இதைவிடப் பேதைமை ஒன்றும் இல்லை. திருஉருவங்களை உடைப்பதினுல் சமய வாஞ்சை போய் விடுமா? அதிகரிக்கும் அல்லவா? முகம்மதியரால் செய்ய முடியாத செயலை இந்த இயக்கத் தலைவர்கள் செய்யத் தொடங்கினது அறியாமையே. இவ்வாறு இந்தப் புதுத் தீக்குரல் தோன்றிப் பறக்கிறது.

4. தீக்குரலுக்கு வாய்ப்பூட்டு

புனிதப் பேச்சுக்களைக் கேட்க வெகுபேர் செல்லமாட்டார்கள். சிற்றின்பக் கதைகளைக் கேட்க வெகுபேர் செல்லுவார்கள். சாத்துவீகமான படங்களைப் பார்க்க வெகுபேர் செல்லமாட்டார்கள். கேலிக் கூத்துப்படங்களையும், கொலைக்குற்றங்களைக் காட்டும் படங்களையும் காண ஆயிரக்கணக்கானபேர் பணத்தைக் கொட்டுவார்கள். நீதிமொழிகளை அறியப் பலபேர் இசையமாட்டார்கள். வசைச் சொற்களை செவிமாந்தப் பெருந்திரளாகச் செல்லுவார்கள். அதுபோலவே தன் மதிப்பு இயக்கத்தில் புதிதாக எடுத்துக் கொண்ட எரித்தல் பேச்சுக்களுக்கும் உடைத்தல் கூற்றுகளுக்கும் ஆயிரக்கணக்காகச் சென்றது வியப்பு அல்ல. சென்றவர்கள் எல்லாம் அவ்வியக்கத்தில் ஈடுபட்டவர்கள் என்று சொல்ல இடமில்லை. வேடிக்கைப் பார்க்கச் செல்லுபவர்களே மிகுதி என்க. இருந்தாலும் உலகை அறியாத இளைஞர்கள் சென்ருல் இந்தப் பொய்ப் பிரசார வலையில் எளிதில் விழுந்து கெட்டுப்

போவார்கள் அல்லவா? அந்த முறையில் இந்த இயக்கத்தின் பேச்சுக்களைத் தடுக்கவேண்டும் என்று ஆதீனத்தார்கள் எண்ணி எழுதியது பிசகல்ல. அதனை வற்புறுத்தி இவ்வகைப் பேச்சுகளுக்கு வாய்ப்பூட்டிடல் வேண்டும் என்று ஆதீனத்தலைவர் கூறினது சரியே ஆகும்.

பாடசாலை மாணாக்கர்கள் உலக அனுபவம் இல்லாத வெள்ளை மனது உடையவர்கள். எந்தப்பேச்சைக் கேட்டாலும் எளிதில் நம்பக்கூடிய எளிமை படைத்தவர்கள். ஆகவே, பொய்யுரைகளையும் சொல் வன்மையினால் மெய்போலப் பேசுவதை எளிதில் மெய்யென நம்பி ஏற்றுக்கொள்வார்கள். ஒருமுறை அவர்கள் மனது ஒரு போக்கில் சென்று விட்டால் அதனைத் திருப்பி அசைத்தல் கடினம். அவர்கள் மனம் இளகிய களிமண் போன்றது. அதனைப் புலி யுருவம் ஆக்கமுடியும், எலி உருவமும் ஆக்க முடியும். ஒரு முறை எலி உருவம் ஆகிக் கெட்டியடைந்து விட்டால் அதனைப் புலி உருவம் ஆக்கமுடியாது. ஆகவே பெற்றோர்களும், ஆசிரியர்களும் இளவயதிலேயே மாணவர்களை நல்ல நிலைமையில் சீர்திருத்த வேண்டும். தற்போது பெற்றோர்களின் அக்கறைக் குறைவினால் மாணவர்கள் உண்மைச் சமயம் அறிய முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்குத் தன் மதிப்புப்பேச்சுகள் வசீகரமான தின்பண்டம் போன்று உள்ளன. வெகு எளிதாக அக்கூட்டங்களுக்குச் சென்று அப்பேச்சுக்களை இன்சுவைபோலச் சுவைத்து இன்பம் உறுகிறார்கள். போதாக்குறைக்கு பள்ளித்தமிழாசிரியர்களும் போதுமான பாதுகாப்பு இல்லாமையினால் அவ்வியக்கத்தில் விழுந்து கிடக்கிறார்கள். ஆகவே மாணவர்களைப் பாதுகாப்பதற்காக வேண்டியாவது இப்படிப்பட்டப் பேச்சுகளுக்கு வாய்ப்பூட்டு இட வேண்டாமா?

5. செய்ய வேண்டிய செய்கைகள்

குன்றக்குடியில் கூடின கூட்டத்தில் மகாசன்னிதானத்தின் தலைமையில் பல அன்பர்கள் அரிய தீர்மானங்களை இயற்றினார்கள். சமயக் கொள்கைகளைப் பாதுகாத்துப் பரப்புவதற்கு ஒரு கழகம் "அருள் நெறித் திருக்கூட்டம்" என்ற பெயரினாலே நிறுவப்பட்டது. அக்கூட்

டத்தில் செயல்குழு ஒன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு எங்கும் ஆயிரக் கணக்கில் அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டும். அதற்காக எளிதாக ஆண்டு ஒன்றுக்கு நாலணுச் சந்தா சேர்க்கவேண்டும். ஜில்லாவிற்கு ஒரு கிளைச்சங்கம் ஏற்படுத்தவேண்டும். இவைகளின் மூலமாக சமயப் பரப்பு, நிரம்பச் செய்யவேண்டும். திருமுறைகளை எரித்தாலும் திருவுருவங்களைத் தகர்த்தாலும், உயிர் கொடுத்தாவது அதனைத் தடுக்கவேண்டும். வாரத்திற்கு ஒருமுறை ஓய்வு நாளில் ஆலயத்தில் கூட்டுத் தொழுகை நடத்தி தேவாராதிகளை ஓதுவித்துச் சமயச் சொற்களைச் சொல்லவேண்டும். இந்தத் திருப்பணியை இடைவிடாது நடத்தி மக்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் ஆகச் செய்யவேண்டும். இலவசமாகச் சிறு நூல்களை வெளியிட்டுப் படிக்கவேண்டும். அவைகளில் பிறர் கேட்கும் சந்தேகங்களுக்கு ஏற்ற விடைகளை எளிய முறையில் தரவேண்டும். இவ்வகைப் பிரசாரத்தினுல் இளைஞர்களில் சமய முன்னேற்றம் உண்டுபண்ண வேண்டும். இந்த முறைக்கு ஒரு பத்திரிகையையும் நடத்தவேண்டும். இவ்வகைத் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இவ்வாறு தீர்மானங்கள் செய்தபோது பல அன்பர்கள் பல கருத்துக்களை வெளியிட்டார்கள். சிலபேர் ஒரு புதுக் கழகம் ஏன் வேண்டும்? செயல் முறையில் வேலை செய்யலாமே என்றுர்கள். எதற்கும் ஒரு கழகம் இன்றி எக் காரியத்தையும் செய்தல் முடியாதென்று அதற்கு விடை கூறப்பட்டது. மற்றுஞ் சிலபேர் சைவ சமயமுறையில் இக்கழகம் ஏற்படவேண்டும் என்றுர்கள். எதிர்ப்பு இயக்கம் பொதுவாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு எதிராக இருப்பதால் கழகத்தின் பெயர் பொதுவாய்த்தான் இருக்கவேண்டுமென்று "அருள் நெறித் திருக்கூட்டம்" என்று பெயரிடப்பட்டது. புதுச் சங்கத்திற்குப் பெருவாரியாக மக்கள் சேரவேண்டுமென்ற நோக்கத்துடன் எளிய சந்தாவாக நான்கு அணு மட்டும் ஏற்படுத்தப் பட்டது. கிளைச் சங்கங்கள் இல்லாவிடில் தமிழ்நாடு முழுவதும் இயக்கத்தைப் பரப்புவது சாத்தியமில்லை யென்று கண்டு ஜில்லாவுக்கு ஒரு கிளைச் சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள். செய்யவேண்டிய

வேலை நிரந்தரமாயிருப்பதற்காக வாரத்திற்கு ஒரு முறையாவது ஆலயங்களுக்கு மக்கள் போகவேண்டி. அதற்கேற்றபடி "கூட்டுத் தொழுகை" ஏற்படுத்துவதைப் பற்றிப் பலபேர் பேசினார்கள். இலவசத் துண்டுகள், பத்திரிகை மூலம் பிரசாரம் முதலியவைகளும் வற்புறுத்தப்பட்டன.

6. கூட்டுத் தொழுகை

தொழுகை இரண்டுவிதம். தன்னந் தனியே வீடுகளிலும், ஆலயங்களிலும் இறைவனைத் தொழுதல் ஒன்று. பலபேர் ஓரிடத்திலோ கோயிலிலோ சேர்ந்து திருப்பாடல்களைப் பாடி இறைவனைத் தொழுது சமய உண்மைகளை வெளிப்படுத்துவது இரண்டு. இவ்விரண்டு முறைகளும் எக்காலத்திலும் எந் நாட்டிலும் இருக்கின்றன. தனித் தொழுகை தொழுகிற ஒருவனுக்கு மட்டும் பயன்படும். கூட்டுத் தொழுகை பலருக்குப் பயன்படும். நம்பிக்கை இல்லாதவனையும் நம்பும்படி செய்யும். பொதுவாகக் கூறுமிடத்து மூவர்கள் இடத்தில் கூட்டுத் தொழுகை காண்கின்றோம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் பல நாடுகளும்சுற்றித் தேவாரங்களை அருளிச் செய்த காலத்தில் ஆயிரக் கணக்கான சீடர்கள் உடன் சென்று தொழுததாகத் திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது. அது ஒரு திரண்ட பிரசாரவேலை. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். கோயில் வழிபாடு செய்யாதவர்கள் கோயிலுக்குச் சென்று வழிபடும்படி கற்பிக்கப்பட்டார்கள். எப்படிப்பட்ட கடினமான நெஞ்சும் தெய்வீகமான இனிய இசையைக் கேட்டால் உருகிவிடும். வெறும் வாய் இசையேயன்றி யாழ் முதலிய இன்னியங்களும் உதவின. இந்த முறையில் பண்டைக் காலத்தில் சமயப் பரப்பு செய்யப்பட்டது. இவ்விதமான சமயப் பரப்பு இல்லாத குறையினால்தான் பின்காலத்தில் சமயம் சீர்குலையத் தொடங்கிற்று.

கிறிஸ்துவம் முதலிய பிற சமயிகள் கூட்டுப் பிரார்த்தனையே சிறப்பாகக் கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டிலோ இடைக்காலத்தில் ஏகான்ம வாதம் முன்னேறக் கூட்டுத் தொழுகை குறைந்து தனித் தொழுகை பெருகிற்று. போதாக் குறைக்கு ஆலயங்களில் சமயக் கொள்கைகளின் பிரசாரத்திற்கு மாறாக சடங்குப்

பெருமை பெருகிற்று. இதனால் ஆலயப் பணியாளர்களுக்கு வருவாய் பெருகிற்றே ஒழிய மக்களுக்குச் சமய அறிவு குறையத் தொடங்கிற்று. பிரசார வேலைக்காகத் தேவாராதிகளை ஓதுவித்தலைப் பண்டைய சைவமன்னர்கள் வற்புறுத்தி யிருக்கப் பின்னால் வந்த ஆலயகர்த்தர்கள் ஓதுவார்களை நிறுத்திவிட்டுச் சடங்குகளைப் பெருக்கி ஆலயங்களை வாணிப நிலையங்களாக்கி விட்டார்கள். இந்த வகையில் ஆலயச் சமயநிலை சீர்கெட்டு விட்டது. இதைக் கண்டு கொழும்பிலும் ஆர்க்காட்டிலும் கூட்டுத் தொழுகை ஏற்படுத்தி வருகிறார்கள். இதைத்தான் குன்றக்குடியிலும் வற்புறுத்தினார்கள்.

7. பிரசார வேலைகள்

உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் எந்தச் சமயத்திலும் பிரசாரம் வெற்றியடைய வேண்டுமென்றால் எளிதான நூல்களை வெளியிடுவதோடு பத்திரிகைகளும் பதிப்பிப்பார்கள். கிறிஸ்தவர்கள் நம் நாட்டில் முன்னேற்றம் அடைவதற்கு உபன்யாசங்கள் மட்டும் அல்லாமல் துண்டுப் பிரசுரங்களும், வாழ்க்கை வரலாறுகளும், மாத, வாரப் பத்திரிகைகளும் உபயோகப் படுகின்றன. துண்டுப் பிரசுரங்களிலே சமயக் கொள்கைகளை எளிதாக எழுதி இலவசமாக விநியோகிக்கிறார்கள். பிற மதத்து இளைஞர்களுக்கும் பரீட்சைகளில் தேர்ந்தவுடன் கிறிஸ்துமத நூல்களைப் பரிசுகளாகக் கொடுக்கிறார்கள். முன்னர்த் தோன்றிய அடியார்களின் வாழ்க்கை வரலாறுகளை மிகவும் உருக்கமான நடையில் எழுதி வெளியிடுகின்றார்கள். எங்கெந்தக் கொள்கையிலே சந்தேகம் ஏற்படுகிறதோ அந்தந்த இடத்திலே காரணங்கள் கண்டு நம்பும்படியான விடைகளைப் பிரசுரம் செய்து வெளியிடுகின்றார்கள். கோயில்களிலே உபதேசம் செய்வதற்காக நன்றாய்ப் படித்த மக்களையே ஏற்படுத்தி அவர்களைக் கொண்டு தெளிவான முறையில் உபதேசம் செய்விக்கின்றார்கள். அவ்வாறு உபதேசம் செய்யும் மக்களுக்கு அனுகூலமாகப் பலவகைக்காரணங்கள் கூறியும் கணக்குப் புள்ளிகளைக் கொடுத்தும், மேற்கோள்களைத் தந்தும், நம்பத்தக்க விடைகளை எழுதியும் உதவி புரிகிறார்கள். இவ்விதமான உதவியினால் உபதேசியார்

களும் பொதுமக்களும் நன்மையடைகிறார்கள். ஆலயத்துக்குச் செல்லுகிறவர்கள் மூடநம்பிக்கையோடு சடங்குகளை மட்டும் பார்த்துவிட்டுக் காசுகளை விரயம் செய்துவிட்டு யாதொரு திருப்தியுமில்லாமல் வீடுகளுக்குத் திரும்புவதைக் காட்டிலும், இறைவனை உள்ளன்போடு தொழுதுவிட்டு, உபதேசியார்களிடம் சமயக் கொள்கைகளை அறிந்து கொண்டு பின்னர் வீடுதிரும்புவது சிறந்ததல்லவா? இந்த முறைகள் பிறநாடுகளில், பிற சமயங்களில் போற்றப் பட்டு வர நமது பண்டைய நாட்டில் தற்போது போற்றப் படுவதில்லை யல்லவா? இவைகளை யெல்லாம் பொதுமக்களுக்கு உணர்த்தும் பொருட்டு ஒரு பத்திரிகையும் ஏற் படுத்தப்பட வேண்டுமென்று குன்றக்குடியில் பேசப்பட் டது. நமது நாட்டில் கிறிஸ்தவர்கள் குறைவாயிருந்த போதிலும் அவர்கள் வெளியிடும் பத்திரிகைகளின் எண் ணிக்கையும், பிரசாரவேலையும் அளவிடக் கூடுமா?

8. எரித்தலும் இடித்தலும்

நூல்களை எரித்தலும், உருவங்களை இடித்தலும் உலகில் புதிதல்ல. அடிக்கடி வரலாறுகளில் படித் திருக்கிறோம். உலகில் வெறிபிடித்த பித்தர்களும் ஆவேசத்தினால் உணர்வற்றவர்களும் இருக்கும் மட்டும் இச் செயல்கள் நடைபெற்றுக்கொண்டே யிருக்கும். உரோமானிய இராச்சியம் சீர்குலைந்த காலத்தில் அடில்லா என்ற கொடுங்கோலன் இவைகளைச் செய்தான். எகிப்து தேசத்தில் காலிபுனுடைய ஆட்கள் இதனையே செய்து ஒப்பற்ற நூலகங்களை அழித்தார்கள். வடஇந்தியாவில் கஜினிமாமூதும், ஆப்கானியரும் இதனையே செய்தார்கள். அவர்கள் கொடுங்கோலர் என்ற பெயர்களை வாங்கிக் கொண்டார்களே ஒழிய அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை. அதுபோலவே இன்றைக்கும் அவர்கள் எண்ணம் ஈடேற முடியாது. புனித நூல்களில் இன்னிசை இலக்கியம் முதலியவைகள் உண்டு. அவைகளை அழிப்பது அடாத செய்கை. அது வெறும் காட்டுமிராண்டித் தனம் ஆகும். ஒரு நூல் எரித்தாலும் எல்லாம் எரிக்க முடியுமா? ஆகவே எரிப்பது என்பது பேதைமையே அன்றி அறிவுள்ள தன்மையல்ல.

இனி உருவங்களை இடித்தல் மிகக் கேவலமான தொழில். உருவங்கள் ஆக்குவது ஒரு சிறந்த கலை. அந்தக் கலையை அழிப்பது நாகரிகமாகாது. பண்டைய சிலை ஒன்றைப் பல்லாயிரம் பொன் கொடுத்து இரசிகர்கள் வாங்குகிருர்கள். அவர்கள் அறியாதவர்களா? இல்லவே யில்லை. ஒரு நடராசச் சிலை செய்வதற்கு நிறைந்த சிற்ப ஞானம் வேண்டும். அதை அழிப்பவன் சிற்ப ஞானமும், நாகரிகமும் இல்லாதவன். அப்படிப்பட்ட அழிவுத் தொழிலில் புகுகின்றவன் நாகரீக சமூகத்திற்குப் புறம்பானவன். அப்படிப்பட்ட இயக்கமும் சீர்கேடான குணம் கொண்டது. ஆகவே அப்படிப்பட்ட துற்குண சாலிகளைச் சீர்திருத்தவேண்டியதே ஆட்சியாளருடைய கடமையாகும். இப்படிப்பட்ட துற்செயல்கள் விளையாமல் இருப்பதற்கு ஆதீனத்தார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் அவசியமானதல்லவா ? சைவ மக்கள் சிந்திப்பார்களாக ! பாதுகாப்புச் செயலில் இறங்குவார்களாக !

---

2. தலப்பகுதி

1. திருக்குரங்கணின் முட்டம்

(கோவைகிழார்)

1. இடம் காஞ்சிபுரத்திற்குத் தெற்கே ஆறுகல்லில் உள்ளது. பாலாற்றின் தென்கரையில் இருக்கிறது. பாதையோரம் இருபுறங்களிலும் நன்செய் நிலங்கள். கோயில் நன்செய் வயல்களின் இடையே இருக்கிறது. ஊரில் சிறு சந்துகளின் வழியே சென்று, பிறகு வரப்புக்களின் மீது நடக்கவேண்டும். மழைக்காலத்தில் நடப்பது கடினம். ஊரெங்கும் ஈரம். நல்ல காற்று கிடையாது. இதனை அடுத்து தூசி என்ற ஊர் இருக்கிறது. அது பெரும் பாதையின்பேரில் இருக்கின்றது. குரங்கணின் முட்டம் பாலாற்றிற்குத் தெற்கில் உள்ளது.

2. கோயில் ஊருக்குக் கிழக்கேநெல் வயல்களின் இடையிலே தனியாக இருக்கிறது. சுற்றுமதில்கள் இல்லை. வெளிப் பார்வைக்குக் கோயில் ஒரே மண்டபம் போன்று

தோன்றும். உள்ளே சென்றால் வெறும் இருட்டு. மிகவும் அசுத்தமாய் உட்புறம் வைக்கப்பட்டிருக்கிறது. கோயிலைச் சுற்றிலும் ஒரு தோப்பு இருக்கிறது. அதற்குச் சிறிது தொலைவில் நிலமட்டத்திற்கு 4, 5 அடி உயரத்தில் ஒரு பெரிய பாறையிருக்கிறது. அப்பாறையே ஒரு குடைக் கோயிலாக ஆக்கப்பட்டுள்ளது. அது பல்லவர் காலத்துக் குடைக்கோயில். மகேந்திரவர்மன் காலத்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். குடைமண்டபம் நிலமட்டத்திற்குக் கீழே 4, 5 அடி தாழ்வில் அமைந்திருக்கிறது. அதன் தூண்கள் சதுரமாகவும் பெரிதாகவும் இருக்கின்றன. மிகப் பழமை பெற்றவை. பார்க்கத்தக்கவை.

3. மூர்த்திகள் சுவாமி வாலீசர், அம்மை இறையார் வளையம்மை. குடைகோயிலில் பல்லவர் ஸ்தாபித்த உருவங்களும் கல்வெட்டும் உண்டு. சிறிது தூரத்தில் பாதைக்கு அருகே ஒருபெரிய ஏரிக்கு அடுத்து ஒரு நீளமான மலைத் தொடர் உண்டு. அதில் நிரம்பப் பல்லவர் குடைமண்டபங்கள் இருக்கின்றன. அவ்வேரி மாமண்டூர் ஏரி என்றும் மலை மாமண்டூர்மலை என்றும் வழங்குகின்றன. குடைமண்டபங்களில் சில பூர்த்தியானவைகளும் சில பூர்த்தியாகாதவைகளும் இருக்கின்றன. மண்டபங்கள் பார்க்கத் தக்கவைகள்.

4. ஐதீகம் குரங்கு, அணில், காக்கை (மூட்டம்) இவை மூன்றும் பூசித்த காரணத்தினால் இவ்வூர் இப்பெயர் எய்தியதாம். வாலி (குரங்கு) பூசித்ததால் வாலீசர் என்று இறைவன் பெயர் ஏற்பட்டது. காக்கை பூசித்த தென்பதற்குச் சான்றாகக் கோயிலைச் சுற்றிக் காக்கை, கீறி, மடுவினை ஏற்படுத்தியதான செயலைக் காட்டுவர். அம் மடுவிற்குக் காக்கைமடு என்று பெயர்.

5. நூல்கள் இந்தத் தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று உண்டு.

விழிநீர் மழுவாட் படையண்ணல் விளங்கும்
கழுநீர் குவளைம் மலர்க் கயல்பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன்ப மிலரே (க)

விடைசேர் கொடியண்ணல் விளங்குயர் மாடக்
கடைசேர் கருமேன் குளிர்ந்தோங் கியகாட்டில்
குடையார் புனல்மல்கு குரங்கணின்முட்டம்
உடையா னெனையா ளுடையெந்தை பிரானே. (உ)

(தேவாரம் - 1ந் திருமுறை)

6. கல்வெட்டு இந்த இடத்தில் 6 கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளின்படி இந்தக் கோயில் கலியூர் கோட்டத்தில் எரிசில் நாட்டில் மூவேந்தூர்ப் பற்றில் பல்லவபுரத்தில் உள்ளது என அறிகிறோம்.

சுவாமி பெயர் திருக்குரங்கணின் முட்டமுடைய நாயனர் என்பது. நான்குசோழர் கல்வெட்டுக்களும், ஒரு விஜயநகரக் கல்வெட்டும், ஒரு இராட்டிரக்கூடக் கன்னர தேவன் கல்வெட்டும் இருக்கின்றன. குலோத்துங்கன் III 20வது ஆண்டில் இக்கோயிலுக்குச் சம்பவராமன் உத்தரவுபடிக்கு நீறணிஞ்சான் சேதிராயன், சத்திமங்கலம் என்ற அம்மைநல்லூரைத் தானம் செய்தான். அடுத்துள்ள தூசி என்ற ஊர் குறிப்பிட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயன் 1529-கி. பி. கல்வெட்டில் மாமண்டூருக்குச் சேர்ந்த குரங்கணிமுட்டத்து இறைவன் பெயர் கொய்யாமலர் சூடுவார் என்று கண்டிருக்கிறது.

குடை கோயிலில் உள்ள ஒரு தூணில் கன்னர தேவனுடைய 24-வது ஆண்டுக் கல்வெட்டு இருக்கிறது. அதில் இக் கோயில் இறைவனுக்குப் பெயர். ‘கல்மடை காத்தாள்வார்’ என்றும், அது எரிசில் நாட்டுக் கலியூர் கோட்டத்துப் பல்லவபுரத்தில் உள்ளது என்றும் கூறுகிறது. ஆகவே இவ்வூரின் பழைய பெயர் பல்லவபுரம் என்று அறியவேண்டும். குடைகோயிலைப் பல்லவரே, தோண்டி ஊராக்கியிருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

——

2. திருப்பட்டீச்சரம்

(சு. சுவாமிநாத தேசிகர், ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் மடம்
சுந்தரப்பெருமாள்கோயில்.)

“ பாடன்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகமதின் மூன்றோர் கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டாவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.” (1)

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானாகிய இறைவன் ஆன்மகோடிகளை உய்விக்க அருள் திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் தலங்கள் பல இருப்பினும் அவற்றிற் கெல்லாம் தலைசிறந்து சிறப்புற்று விளங்கும் தலம் இத் திருப்பட்டீச்சரமே யாகும்.

(1) இருப்பிடம் :—இவ்வரும்பதி தென்னிந்திய இருப்புப் பாதையில் தஞ்சாவூர் — கும்பகோணத்திற்கு இடையில் உள்ள தாராசுரம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென் மேற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

(2) தலப்பெயர் :—திருப்பட்டீச்சரம் என்பது சோழவள நாட்டில் காவிரி நதியின் தென்கரையிலுள்ள 23-வது தலம். இவ்விறைவனைக் காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் “ பட்டி ” என்னும் பசு பூஜித்தமையால் இப்பதி பட்டீச்சம் என வழங்கப்படுகிறது என்பர்.

(3) இராமர் வழிபட்டது :—இவ்வாலயத்தில் உள்ள சிவ பெருமானை இராமர் பூஜித்து இராவண சங்காரத்தால் தனக்கு உண்டாகிய சாயாகத்தி தோஷம் நீங்கப்பெற்றார். இவ்விழா பிரதி மார்கழிமாத அமாவாசையன்று சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. (அத்துடன் திருமுலைப்பால் உற்சவமும் நடத்தப்படுகிறது). அன்று ஞானம்பிகை திருக் குளத்திலும் கருடக்கிணற்றிலும் பட்டீச்சரர் (சிவபெருமான்) ரிஷப வாகனத்தில் அமர்ந்து தீர்த்தம் அருளுவர்.

இராமரால் தோற்றுவிக்கப்பெற்ற கூபமும் முதற்பிராகாரத்தில் இருக்கிறது.

(4) வழிப்பட்டோர் :—திருஞானசம்பந்தர், இராமர், பட்டி என்னும் பசு, சித்ரசேனன், தர்மதர்மன், சத்திய மன்னன், விஸ்வாமித்ர மகரிஷி, மற்றும் பல தேவர்களும் முனிவர்களும் அரசர்களும், இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கிப் பேறுபெற்றூர்கள்.

(5) திருஞானசம்பந்தர் முத்துப்பந்தர் பெற்றது :—திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவலஞ்சுழியை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருக்கு நாளில் முதிர்வேனிற் காலம் வந்தது. பிள்ளையார் திருவலஞ்சுழியினின்றும் நீங்கித் திருவாறை மேற்றளியை வணங்கித் திருச்சத்தி முற்றத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு திருப்பட்டீச்சரத்திற்குப் போகப் புறப்பட்டனர். அப்பொழுது (பட்டீச்சரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்) வெயில் வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டுத் திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருமுடியின் மேல் சிவபூதம் தம்மை யாரும் அறியாதபடி முத்துப்பந்தரை எடுத்துப் 'பட்டீசர் எம்மை விடுத்தருளினூர்' என்றியம்பியது. முத்துப்பந்தரும் சொல்லும் ஆகாயத்தில் எழப் பிள்ளையார் திருவருளைத் துதித்துப் பூமியில் விழுந்து வணங்கினர். பரிசனங்கள் முத்துப்பந்தரினைக் காம்பிலே தாங்கினர். பிள்ளையார் அம்முத்துப்பந்தர் நிழற் கீழ்ச் சென்று திருப்பட்டீச்சரத்தை அடைந்து வலம்வந்து இறைவன் திருவடிகளைக் கண்டு தரிசித்துப் "பாடன்மறை சூடன்மதி பல்வளையோர் பாகமதின் மூன்றூர்கணையால்" என்னும் தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர்.

முத்துப்பந்தரின் நிழல் திருமன்றில் அண்டர்பிரான் எடுத்த திருவடி நிழல்போல் ஆநந்தம் விளைத்தமையின் கோபுரத்திற்குப் புறத்தே தூரத்தே நின்று வணங்கிய போது சந்நிதியில் இருந்த இடபதேவரை விலகச்சொல்லிப் பட்டீசர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு அரிய காட்சி தந்தருளத் திருஞானசம்பந்தர் இறைவனை வணங்கி மகிழ்ந்தார்.

(6) சிறப்புகள் :—மாளவ தேசத்துத் தர்மபுரத்தில் தர்மதர்மன் என்பவனுக்கு மேதாதி என்ற முனிவரால் ஏற்பட்ட

சாபத்தினுல் நாய் வடிவம் அடைந்து ஞானதீர்த்தத்தின் துளி பட்டமாத்திரத்தில் சாபம் நீங்கி முன்போல் ஆனுன். பராசக்தி இங்கு தவம் செய்யப்பட்டு பட்டீசுவரர் ஜடாதரராய்த் தரிசனம் கொடுக்கப்பட்டதும் காம்பிலி நகரத்து அரசனுல் சித்ரசேன மகாராஜன் இங்கு புத்திர காமேஷ்டி யாகம் செய்து புத்திரப் பேற்றை அடைந்தான்; சத்திய மன்ன மகாராஜனுக்கு ஞானதீர்த்தத்தில் நீராடிய மகிமையாலும் ஒளியின் பஞ்சாட்சர உபதேசத்தாலும் பிரமகத்தி தோஷம் நீங்கியதும், விஸ்வாமித்திர மகரிஷிக்கு காயத்திரி மந்திரம் சித்திக்கப் பெற்றதுமான பெருமைகளை உடையது.

(7) ஆலய அமைப்பும் திரு உருவும் :—இவ்வாலயத்தில் உள்ள சுவாமி அம்பாள் சந்நிதி இரண்டும் கிழக்குப் பார்த்ததாக அமைந்துள்ளது; இவ்வாலயத்திற்கு முன் உள்ள நந்தி அழகாகவும் பெரிதாகவும் விசித்திர வேலைப்பாடமைந்ததாகவும் காணப்படுகிறது; இந்நந்தி திருஞானசம்பந்தப் பெருமாளின் பொருட்டுச் சற்றுத் தெற்கே விலகியிருப்பதை இன்றும் காணலாம். கிழக்குப் பிரகாரத்தில் வைரவக் கடவுளும் மேற்குப் பிரகாரத்தில் ஸ்ரீ ஆறுமுகக் கடவுளும் அழகிய வேலைப்பாடமைந்த மூர்த்திகள். உள்ளே வடக்குப் பிரகாரத்தில் துர்க்கை ஆறுகைகளுடன் காட்சியளிக்கிருள். வெளிப் பிராகாரத்தில் வடக்குக் கோபுரத்திற்கு எதிரில் தனியே துர்க்கையம்மனுக்குத் தனி ஆலயம் உண்டு. இது மிகவும் சக்திவாய்ந்ததாக கூறப்படுகிறது; இவ்வாலயத்தில் இவ்வம்பாளுக்குத்தான் பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் பக்தகோடிகளால் நடத்தப்படுகின்றன. சந்நிதிக்கு எதிரில் மூன்ருவது பிராகாரத்தில் ஞானவாவி என்ற தீர்த்தம் உண்டு. அதன் கரையில் ஆக்ஞா கணபதி இடது காலை மடக்கி ஒரு இடது கையைத் தொடையில் வைத்த கோலத்துடன் வீற்றிருக்கின்ருர். மேலும் அதன் கரையிலுள்ள தலவிருக்ஷமாகிய வன்னிமரம் கோயிலின் தொன்மையை விளக்குவதாயிருக்கின்றது. இராமபிரானுக்காகக் கருடனுல் உண்டாக்கப்பட்ட கருட தீர்த்தம் என்னும் கிணறு இருக்கிறது. இவ்வாலயத்தில் புராதான ராமர் படம் ஒன்று இருக்கிறது. சுவாமி ஆலாயத்திற்கு வடபால் தேவியார் ஆலயம் தனியாய் இருக்கிறது. இங்குள்ள திருஞானசம்பந்தரின் உற்சவ மூர்த்தி எங்கும் காணவியலாத

வகையில் பேரெழிலுடனும் பேரொளியுடனும் காட்சி நல்குகிறது. இங்கு சில ஆண்டுகளுக்கு முன் சுரங்கத்தினின்றும் எடுத்து வைக்கப்பட்டுள்ள சில நடராஜரின் திருஉருவங்கள் இருக்கின்றன. கோவிந்த தீக்ஷிதர் என்னும் மந்திரியால் ஆதியில் இவ்வாலயம் திருப்பணி செய்யப் பெற்றதாம். அவருடைய உருவமும் அவர் மனைவியாரின் உருவமும் அம்மன் சந்நிதியில் இருக்கின்றன.

(8) **திருப்பணி** :—இவ்வாலயம் ஞானசம்பந்தப் பெருந்தகையாரால் பாடல் பெற்றதாக இருந்தும் மிகவும் சிதைவுற்றுச் சீர்கேடான நிலையில் இருப்பது மிகவும் வருந்தத்தக்க செய்தி யாகும். தற்சமயம் வெளிப் பிரகாரத்தின் கீழ்ப் பரப்பும் மற்றும் பல சிறு பாகங்களும் திருப்பணி செய்ய வேண்டுவன மிக்க அவசியமாகும். இவ்வாறு சீர் கேடான நிலையில் இருக்கும் இவ்வாலயத்தைப் பொருள் வளம் படைத்த புண்ணியசீலர்களில் யாரேனும் ஒருவர் திருப்பணி செய்ய முன் வாராரோ ?

(9) **திருநாமங்கள்** :—சுவாமி : ஸ்ரீ பட்டீசுவரர். அம்மை : பல்வளைநாயகி, ஞானம்பிகை. தீர்த்தம் : ஞானவாவி. தலவிருக்ஷம் : வன்னிமரம்.

(10) பந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி
ஞானசம் பந்தனணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்பதிலவே. (11)

[பட்டீச்சரமேய புன்சடையனை ஞானசம்பந்தன் செந்தமிழ்கள் கொண்டு இனிது செப்பவல்ல தொண்டரது வினை நில்லா.]

---

3. சாத்திரப் பகுதி

1. திருப் பல்லாண்டு*

(பண்டிதர் - சைவப்புலவர் - த. போ. கார்த்திகேசு)

'உலகினில் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது', என்பதற்கிணங்க அரிதிற் பிறந்த சைவசமயத்தவர்களாகிய நாம் கோவில் வழிபாடு செய்யுங்காலங்களில் நித்திய பூசைவேளைகளிலும் திருவிழாக்காலப் பூசைவேளைகளிலும் தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புகழ், திருப்புராணம் என்பனவற்றைப் பாடும்படிக்கு ஒரு பூசகர் 'அருளிப் பாடுக' எனவேண்ட விரும்பிய ஒருவர் விரும்பிய தேவாரம் ஆகியவற்றைப் பாடக் கண்டும் கேட்டும் உள்ளோம். ஆகவே இங்கு நடுவே ஓதப்படும் திருப்பல்லாண்டு என்பது யாது? பாடினோர் யாவர்? பாடப்பட்டோர் யாவர்? பாடவேண்டியதன் அவசியம் யாது? என்னும் வினாக்களுக்கு விடைகளை ஆராய்வோம்.

சைவத்திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையாகத் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்பன அருளுடன் இவை இறைவனிடத்தில் அவனது பராக்கிரமங்களை எடுத்துக் கூறி, மற்றைய சைவசமயக் குரவர்கள் அடியார்கள் பாடிய தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருப்புராணம் போன்று தமது குறைகளைப் பாடினோர் எடுத்துக்கூறி முறையிட்டு வேண்டுவனவற்றைப் பெற்றுக்கொண்ட கொள்ளும் முறையில் பாடப் பெற்றமையால் சைவத்திருமுறைகளிற் சேர்க்கப்பட்டுள்ளன. கி. பி. 10–ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 11–ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வசித்த தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பி அவர்களால் இவை ஒன்பதாந் திருமுறையாக வகுக்கப்பட்டு, கி. பி. 970க்கும் 984க்கு மிடையில் அரசாண்ட மதுராந்தக உத்தம சோழன் காலத்திலேயே 9-ம் திருமுறையாக இடம் பெற்றன. திருப்பல்லாண்டு என்ற ஒரு தனி நூல் கிடையாதென்றும், சேந்தனார் அருளிச்செய்த

---

*இது 19–5–52ல் இலங்கை வானொலி நிலையப் பேச்சு; இசைவுபெற்று வெளியிடப்பட்டது.

நான்காவது திருவிசைப்பாப் பதிகமே பிற்காலத்தில் பரமசிவனைப் பல்லாண்டு வாழ்க என மனம் நிறைந்த அன்பினுற் பாடப்பட்டதாகலின் திருப்பல்லாண்டு எனத் தனிநூலாகப் பிரித்துப் போற்றப்பட்டதென்றும் அறிஞர் கூறுகின்றனர். எவ்வாறு கூறப்படினும் திருப்பல்லாண்டு எமக்கு நற்றுணையாய் அக்காலந்தொடங்கி ஓதப்பட்டு வருதல் வெளிப்படை.

திருப்பல்லாண்டு என்பது முத்தித்திரு (செல்வம்) வைத்தரக் கூடியதாய் எல்லாம் வல்ல பரமசிவனைப் பல்லாண்டு வாழ்க என ஒவ்வொரு பாட்டிலும் எடுத்துக் கூறுவதினுலே புறப்பொருளில் வரும் பாடாண் திணைக் கிலக்கியமாய்த் திகழ்கின்றது. நம்மைப் படைத்து அருள் புரிகின்ற இறைவனிடத்தில் நாம் செலுத்த வேண்டியது அன்பேயாகும். தாய்தந்தையரிடமே அன்பு பாராட்டுவது நமது கடனுயிருக்க, உலகர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாயுள்ள இறைவனிடத்தில் நாம் அன்பு பூண்டிருத்தல் மிகச் சிறந்த கடமையாகும். விருப்பு வெறுப்பற்ற கடவுளிடத்து நாம் அன்பு பாராட்டுவதால் யாது பயன்? இறைவன் நமது அன்பை எதிர்பார்க்கின்ருனு? என்ற கேள்விகள் எழுகின்றன. இறைவன் நமது அன்பை எதிர்பாராவிடினும் நாம் நமது கடமையைச் செய்தலில் தவறுதலாகாது. எனவே நாம் இறைவனை வழிபடுதலே வேண்டும். இவ்வாறு வழிபாடு செய்யும்போது பூமாலை சாத்தி வழிபட்டோர், வழிபடுவோர் சிலர். பாமாலை சாத்தி வழிபட்டோர் வழிபடுவோர் சிலர். பாமாலை சாத்தி வழிபட்டோர் வரிசையில் உள்ள நம் சேந்தனுர் பல்லாண்டு பாடி வழிபட்டார் என்பதும் அப்பல்லாண்டுப் பாடல்கள் அன்று தொடங்கி இன்றுவரையும் இனிமேலும் பெரிதும் போற்றப்படுதலும் நாம் தெள்ளிதிற் தெரிந்துகொள்ளும் விஷயங்களாம்.

சேந்தனுர் பட்டினத்தடிகளின் காரியஸ்தர் என்று பெரியோர் கூறுவர். சோழனுல் சிறையிட்டபோது,

''மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மன்னினுனும்
நித்தமுந் தேடிக்காணு நிமலனே யமலமூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனைச் சிறையிலிட்ட
கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே''

எனப் பட்டினத்தடிகள் பாடியமை கொண்டு சேந்தனார் திருவெண்காட்டுக்குச் சமீபமாயுள்ள நாங்கூரின ரென்பது தெளிவாகின்றது. இவர் ஒரு சமயம் ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நிவேதனஞ் செய்தனரென்பதைத் திருக்களிற்றுப் பாடலில் பாடப்பெற்ற, "அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை, அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க — அவிழ்ந்தசடை, வேந்தனுர்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற், சேந்தனார் செய்த செயல்" என்ற பாவைக்கொண்டும், சிவஞானமுனிவர் செப்பிய, "வரையேற விட்டமுதம் சேந்தனிடவுண்டனே" என்ற தொடக்கத்துப் பாட்டைக்கொண்டும் அறியலாகுமென திருவிசைப்பாவின் பெருமையை முன்புரைத்தபோது எடுத்துக்கூறினேன். நாங்கூர்ச் சேந்தனார் வேறு. திருவிசைப்பா திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வேறு எனவும்கூறுவாருளார் எவ்வாறாயினும் சேந்தனார் என்னுமொருவர் திருவிசைப்பா திருப்பல்லாண்டைப் பாடினாரென்பது ஒன்பதாம் திருமுறையிலுள்ள பாயிரச் செய்யுளில், "சேந்தன் அன்புறு திருப்பல்லாண் டொன்றே டிசைப்பா மூன்று" என்று கூறப்படுமாற்றானும் தெளிதலாகும்.

இறைவனை வாயார வாழ்த்துதல் எனது கடமையாகும். இது பற்றியே நம்சேந்தனார் திருவிசைப்பாவேயன்றி திருப் பல்லாண்டையும் பாடிய பெருமையைப் பெற்றுமென்மேலும் போற்றப்படுகின்றனர். அவர் பாடிய திருப்பல்லாண்டுப் பதிகம் பதின்மூன்று பாட்டுகளை யுடையது. அன்பின்முதிர்ச்சியால்ஒவ்வொரு பாட்டிலும் பரமசிவனைப் பல்லாண்டு வாழ்கஎனப்பாடிப் போற்றினார். முதலாவதாக பல்லாண்டு பாடிய பெருமை இவரையே சாரும் என்பதனை "சேந்தன் அன்புறு திருப்பல்லாண் டொன்றே டிசைப்பா மூன்று" எனத் திருப்பல்லாண்டை 'அன்புறு' என முன்னுக்குச் சிறப்பித்துச் சொல்லப்படுதல் கொண்டு ஊகித்தறிய இடமிருக்கிறது.

திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் கோயில்பற்றியது. கோயில் என்பது சிதம்பரம் எனவும் தில்லை எனவும் போற்றப்படும் தலமாகும். இது, ஸ்ரீ நடராசப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதைக் கொடுத்தற்கு 'என்றுவந்தாய்' எனக் கேட்கும் திருக்குறிப்புடன் ஆனந்தத் தாண்டவம்

புரியும் அருமை சேர் திவ்விய தலம். இத்தகைய பெருமை வாய்ந்த தலத்தில் குஞ்சிதபாதனாகிய சிவபெருமான் திருமுன்னின்று சேந்தனார் பாடியமை மிகப் பொருத்தமே. இங்கு எழுந்தருளிய சிவன் எந்நேரமும் நினைப்பிற்குரியவன் என்பதுபற்றியே "திருச்சிற்றம்பலம்" "திருச்சிற்றம்பலம்" என நாம் அடிக்கடி எச் செய்கையின் முதலிலும் முடிவிலும் சொல்லுகின்றோம். நமது சேந்தனாரும் 'மன்னுக தில்லை' எனத் தமது திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடுதற்கு ஆரம்பித்தனர். திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடவேண்டிய பண் பஞ்சமம் என வரையறுக்கப்பட்டுள்ளது. திருவிசைப்பா திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடவேண்டிய பண்களை எடுத்துரைக்கும் 3-ம் பாயிரச் செய்யுளில் 'மற்றெவையும் பஞ்சமமே' என்பதனால் அறிதலாகும். எனவே பஞ்சமம் திருப்பல்லாண்டு பாடுதற்குரிய பண்ணாகும். இப்பஞ்சமம் என்னும் பண் இக்காலத்தில் எப்பெயரால் அழைக்கப்படுகிறதென்பதை அறிதற்குச் சங்கீத விற்பன்னர்களது உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

இனித் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்துள்ள பாக்களை ஆராய்வோம்:—

மன்னுக தில்லை வளர்கநம்
    பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத் துள்ளே
    புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமட வாளுமை
    கோனடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
    பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

இது முதற் செய்யுள். தில்லை என்னும் கோயிற்பதி நிலைபெறுக. நமது அன்பர்கள் வளர்வார்களாக. வஞ்சகர்கள் போய் நீங்குவார்களாக. பொன்னாற் செய்த கனகசபை யென்னும் மண்டபத்திலே புகுந்து கொண்டு உலகம் யாவற்றையும் விளங்கும்படி செய்து, அன்ன நடையும் இளமையும் பொருந்தி அறிந்தும் அறியாதார் போன்றிருக்கும் உமையம்மையாரின் தலைவனும், அடியோமாகிய எமக்கு அருள்புரிபவனும், இனிமேல் பிறவி யெடுக்காத வகைக்கு வழியையும் தந்தவனும், பித்தன் எனப் போற்றப்பட்டவனு

மாகிய சிவபெருமானைப் பல்லாண்டு வாழ்க எனக் கூறு வோமே என்ற பொருளை இப்பாட்டுத் தருகிறது. எனவே வஞ்சக மனத்தவர்க்குப் பக்தர்களுடன் தில்லையிற் கூடுவதற் கிடமில்லை யென்பது பெறப்படுகின்றது. அன்றியும் உலகி லுள்ள சிவதலங்களில் தில்லை சிறந்ததென்பதும் போதரு கின்றது. "கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர், பிண்டத்தில் வாரார் என்றுந் தீபற, பிறப்பிறப் பில்லை யென்றுந் தீபற" என்னும் திருவுந்தியார்க் கருத்து, 'பின் னைப் பிறவியறுக்க நெறிதந்த' என்ற சொற்றொடர்களில் பொதிந்திருத்தலைக் காண்கின்றோம். ஒருவேலையைச் செய் வதற்குரிய ஆயுதங்களே நம்மிடமில்லாவிடத்து நாம் பிற ரிடத்து இரவல்பெற்று அவ்வேலையைச் செய்து முடிக்கின் றோம். அதேபோல் நமக்குச் சொந்தமல்லாத ஆயுதங் களாம் பஞ்சேந்திரியர்கள் முதலான ஆன்மதத்துவங்களைப் பெற்ற நாம் அவை உள்ளபோதே கடவுளை அடைதற்குரிய வழியில் தொழிற்படவேண்டுமென்பதும் வெளிப்படையாக விளக்கப்பட்டுள்ளது. அன்றியும் சிவன் சுந்தரமூர்த்தி நாயனாரால் பித்தன் என ஏசப்பட்டமையும் பின்பு பித்தா பிறைசூடி எனப் பாடிப் போற்றப்பட்டமையும் இப் பாட்டில் 'பித்தற்கே பல்லாண்டு கூறுதுமே' என்பனவற் றால் விளக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் பாட்டில் திண்ணிய நெஞ்சுடையவர்களைத் தூரப்போகும்படிக்கும், மெய்யடியார்களை விரைந்து வரும் படிக்கும் என்றுமுள்ள ஈசற்குத் தொண்டு செய்யும் படிக்கும் அறைகூவி அழைக்கின்றார் நம் சேந்தனார் அப் பாட்டை நோக்குங்கள்.

"மிண்டு மனத்தவர் போமின்கள்
 மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடியீ
 சற்காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருளள
 வில்லதோரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்றும் என்று முள்ள
 பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே."

இப்பாட்டால் நாம் ஒழுக வேண்டிய முறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மூன்றும் பாட்டைக் கவனிப்போம் :—

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரை சீராட்டுந் திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த்திக் கென்னகநெக ஆறமமிர் தினுக்கால நிழற்
பட்டனுக்கென்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

இப்பாட்டில் நிட்டையின்றியிருந்த தன்னை யாட்கொண்ட மேலானவரும், அட்டமூர்த்தியாய் நின்றவரும், கல்லால விருட்சத்தின் கீழ் சனதர் முதலிய நால்வர்க்கும் பட்டனுய் (ஆசாரியனுய்) உபதேசித்தவருமான சிவனைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோமென்று கூறுகின்ருர். "தந்ததுன்றன்னைக் கொண்டதென்தன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்" என்ற மணிவாசகப் பெருமானின் கருத்து என்னைத் தன்பாற்படுத்தானுக்கே என்ற வார்த்தைகளில் அமைந்திருக்கின்றன. 'இருநிலனுய்த் தீயாகி நீருமாகி' என்ற தொடக்கத்த அப்பர் தேவாரமும் அட்டமூர்த்தி என்பதனுல் நினைவுகூரப்படுதலைக் காண்கின்ருேம்.

நான்காம் செய்யுளை நன்கு நோக்குவோம் :—

"சொல்லாண்ட சுருதிப்பொருள்சோதித்த தூய்மனத்தொண்டருள்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர் சிறுநெறி சேராமே [வீர்
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே."

இச்செய்யுளில்,

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனர்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படு மிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு
மாதலாலிவை யிலாதான் அறிந்தருள் செய்வனன்றே"

என்ற சிவஞான சித்தியார் கருத்து அடங்கியுள்ளது. அன்றியும் பல ஆண்டுகள் என்னும் நிலையைக் கடந்து இருந்த, இருக்கின்ற, இருக்கும்பரமசிவனுக்குப் பல்லாண்டு கூறுதுமே என்று சொன்னயம், பொருணயம் பொதிந்து சுருங்கக்கூறி விளங்க வைக்கின்ருர் நம் சேந்தனுர்.

ஐந்தாம் பாவில் இந்திரன், விஷ்ணு, பிரமன் என்போர் தேடியுங் காணமுடியாத சிவன் தன்னை யாட்கொண்டானென்றும் அவனுக்கு யாது கைம்மாறு செய்ய

வல்லேன் என மனம் வருந்திப் பல்லாண்டு மாத்திரம் கூறும் தனது நிலையை எடுத்துரைக்கின்றார் :

" புரந்தான் மாலயன் பூசலிட் டோலமிட்டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்ப வென்னுயிராண்ட கோவினுக்கென் செயவல்ல
கரந்தும் கரவாத கற்பகனாகிக் கரையில் கருணைக்கடல் [மென்றும்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே."

இப்பாட்டில் பட்டினத்தடிகள் பாடிய,

" பொன்னாற் பிரயோசனம்
பொன்படைத்தார்க்குண்டு பொன்படைத்தோன்
தன்னாற் பிரயோசனம்
பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம்
வேணதெல்லா முண்டு உனைப்பணியும்
என்னாற் பிரயோசனமேதுண்டு
காளத்தி யீச்சுரனே "

என்ற பாட்டின் கருத்து பொதிந்திருப்பதைக் காண்கிறோம்.

பிரமன், இந்திரன், விஷ்ணு என்போர் சிவனை வழிபட வந்து கூவியழைத்துக் கூட்டங் கூட்டமாய்நின்று கூத்தாட எனது உயிர்க்கு அமுதமாகியவனும், ஆசைக்குரிய செல்வமும், அப்பனும், தேவர்கள் எண்ணுமெண்ணங்கட்கு அப்பாற்பட்டவனுமாகிய சிவனுக்குப் பல்லாண்டுகூறுதுமே என்ற கருத்தமைந்த ஆறும் செய்யுளைக் கவனியுங்கள் :—

சேவிக்க வந்தயனிந்திரன் செங்கண் மாலெங்கும் திசைதிசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக்குழாங் குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கமுதை யென்னார்வத் தனத்தினை யப்பனையொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

என்பது. பாவிக்கும் பாவகத்தப்புறத்தான் என்னுஞ் சொற்கள் எண்ணும் எண்ணங்கட்கு அப்பாற்பட்டவனாகிய சிவன் எனப் பொருள் தந்து நிற்கின்றன. அன்றியும் திருவுந்தியாரில் வரும்,

" பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை யறுப்ப ரென்றுந் தீபற
பாவிக்கில் வாராதென் றுந்தீபற "

என்ற பாவின் பொருளையும் உள்ளடக்கி மிளர்கின்றன.

ஏழாம் எட்டாம் செய்யுள்களில் சேந்தனூர் தாம் மெய்யறிவு பெற்றமையையும் பிறர் பெறற்கரிது என்பதையும் அப்படியாக அறிவுதந்த பெருமானுக்கே பல்லாண்டு கூறுவதாகப் பாடியுள்ளார்.

'திருப்பல்லாண்டு அருளிப்பாடுக' என வேண்டப்பட்டதும் அடிக்கடி பலரால் ஓதப்படுவதான ஒன்பதாம் திருப்பாட்டை உற்று நோக்குவோம் :—

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பல மேயிட மாகப்
பாவித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

என்பது. திருமூலர் காலத்திருந்த வியாக்கிரமருக்கு வசிட்டருடைய தங்கையிடம் பிறந்த உபமன்யு (மகாமுனிவர்) என்னும் பாலகனுக்காகத் தில்லையில் நடராசர் திருப்பாற்கடலைவரவழைத்தும் திருமாலுக்குச்சக்கரம் உதவியதுமான நிகழ்ச்சிகளைப் புரிந்தவரும், எந்நேரமும் சந்தோஷத்துடன் தோற்றமளிக்கும் தில்லைவாழ் அந்தணர்கள் இருக்குமிடமாகிய சிதம்பரத்தில் எம்மைப்பாதுகாத்து ஆனந்தத் தாண்டவம் புரியும் அற்புத மூர்த்தியாகிய சிவனுக்குப் பல்லாண்டு கூறுதுமே எனக் கூறப்பட்டிருத்தலினாலேயே பலருடைய ஞாபகத்தில் இச்செய்யுள் நிலவுவதைக் காண்கின்றோம்.

பத்தாம் செய்யுளில் பாதகத்துக்குப் பரிசு வழங்கப்பட்டமை பகரப்பட்டுள்ளது. பாதகத்திற்குப் பரிசு கொடுக்கப்படுதல் முறையா? அவ்வாறு பாதகஞ்செய்து பரிசு பெற்றவர் யாவர்? என்ற கேள்விகள் எழக்கூடும். செய்யுளைக் கவனியுங்கள் :—

தாதையைத் தாளற வீசியசண்டிக் கிவ்வண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதி மணிமுடித்தாமமும் நாமமுந்தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்திற்குப் பரிசும் வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

இதில் தந்தையின் காலறவெறிந்த சண்டேசுர நாயனாரின் வரலாற்றை எடுத்துரைத்து எம்மை மென்மேலும் சிவ வழிபாட்டில் நன்கு ஈடுபடச் செய்கின்றார் நம் சேந்தனார். இப்பாட்டின் விரிவுரையை விரிவஞ்சி விடுக்கின்றேன்.

பதினோராம் பன்னிரண்டாம் பாட்டுகளில் திருவாரூரில் திருவாதிரைநாட்சிறப்பை எடுத்துக்கூறித் தில்லையும்திருவாரூரும் ஆதிரைநாட்களில் அவசியம் தொழப்பட வேண்டிய தலங்களென்பதை வெளிப்படையாக விளக்கினர் விறல்சேர் வித்தகராம் சேந்தனுர்.

பதின்மூன்றும் செய்யுளாய இறுதிச் செய்யுளை இப்பொழுது நோக்குவோம் :—

எந்தையெந்தாய் சுற்றமுற்று மெமக்கமுதா மெம்பிரா னென்றுமே
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா ரடிநாயன் செப்புறை
அந்தமி லானந்தச் சேந்தனெனைப் புகுந்தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று பல்லாண்டு கூறுதுமே.

இப்பாட்டில் எமது தந்தையும் தாயும் சுற்றமும் எமக்கமுதாயுமுள்ள சிவபெருமானைத் தியானஞ் செய்கின்ற சிவனடியார்களுக்கு அடியவனுகிய மகிழ்ச்சியுடைய சேந்தன் எனத் தனது தன்மையைக் கூறுவது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையை நினைவூட்டுகின்றது. நாமும் அடியார்க்கடியராய் வாழவேண்டுதலின் அவசியமும், 'ஆருயிர் மேற்பந்தம் பிரிய பரிந்தவனே' என்பதனுல் யாவரும் ஆன்மசுத்தி அடைவதற்குப் பல்லாண்டு ஓதுவதவசியம் என்பதும் குறிப்பினுல் தெரிய வைத்தார் நமது நாயனுராம் நற்சேந்தனுர்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சிவஞான போதச் சூத்திரங்கள் பன்னிரண்டிற்கும் பொருத்தமான இலக்கியங்களாய் அமைந்திருத்தலை ஆராய்ச்சியாளர் எடுத்துக் கூறுவதுகொண்டு சிவஞான போதம் 9-ம் சூத்திரத்திற்கும் சைவத் திருமுறைகளில் ஒன்பதாவதான திருவிசைப்பா திருப்பல்லாண்டிற்கும் பொருத்தமிருத்தலை அறிகின்றோம். சிவஞான போதம் 9-ம் சூத்திரம் ஆன்மசுத்தி பண்ணுமாற்றை விளக்குவது. திருப்பல்லாண்டின் இறுதிச் செய்யுளில் 'பந்தம் பிரியப் பரிந்தவனே' எனக் கூறப்பட்டமைகொண்டும் நாம் ஆன்மசுத்தி செய்வதற்கு 9-ம் திருமுறையிலமைந்த திருப்பல்லாண்டைத் தவருது ஓதவேண்டியவர்களாகின்றோம். இதனுலேயே கோவில்களில், 'திருப்பல்லாண்டு பாடுக' என நினைவூட்டப்படுகின்றமை தெளிவாகின்றது. 'பல்லாண்டு கூறுதுமே' எனத் தன்னுடன் கூட்டும் உளப்

பாட்டுத் தன்மைப் பன்மைத் தெரிநிலை எதிர்கால வினை முற்றாய் முடிக்கின்றமையால் தோன்றா எழுவாய்களான யானும் நீயும் அவனும் என்பன தோற்றவும், யாம் என்னும் தன்மைப் பன்மைத் தோன்றா எழுவாய் தோற்றவும் கூட்டுப் பிரார்த்தனைக்குப் பொருத்தமாய்க் கூறியதனால் நம் சேந்தனார், 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்துடையராயிருந்தனர் என்பது வெளிப்படை.

ஆகவே, சைவ சமயத்தவர்களாகிய நாம் திருப்பல்லாண்டுப் பதிகப் பாட்டுகளையும் நாள்தோறும் ஓதி நன்மை பெற முயற்சிப்போமாக.

---

2. சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முந்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

(மலர் - 25; இதழ்-7; பக்கம் - 262-இன் தொடர்ச்சி)

நன்னலம் பெற நிறைந்த ஞானமே என்று பிரிநிலைப் பொருள் குறித்த ஏகாரத்தை ஈற்றிலுடைமையால், குணியுடன் பாசமுமாகிய சடத்தின் தன்மை கூறுமுகத்தால் குணமாகிய பாசஞானத்தின் இயல்பு உணர்த்தப்பட்டது. குணியாகிய பசுவி(சித்தி)னது தன்மை கூறுமுகத்தால் குணமாகிய பசுஞானத்தினியல்பு உணர்த்தப்பட்டது. பசுஞானமும் பாசஞானமும் சுதந்திர ஞானமல்ல, பதிஞானமொன்றே சுதந்திரஞானம் என்னும் உண்மையுயர்வை உணர்த்தற்குப் பிரிநிலையேகாரம் கொடுக்கப்பட்டது.

பசுஞானத்தின் இயல்பு ஆன்மவிலக்கணத்தாற் கூறிப் போந்தமையின், அதனை அநுவாதமுகத்தால் விளக்கி, ஏனைப் பாசஞானத்தின் இயல்பு அப்பசுஞானத்தின் இயல்புணர்த்துமுகத்தால் விளக்கப்பட்டது. தன்னியல்புணர்தற்கு எடுத்துக்காட்டாகப் பொதுவியல்பும் உடன்கூறப்பட்டது. 'மருள் எனில் இருளாய் நிற்கும் அருள் எனில் ஒளியாய் நிற்கும்' எனவே பசுஞானம் தனக்கெனச் சுதந்திரம் உடையது அன்மையாலும் பாச ஞானம் தானென்ன வேறு அன்மையாலும் பதிஞானம்

ஒன்றே சுதந்திர ஞானம் எனப்படும் என்று பிரிநிலை யேகாரத்தை வலியுறுத்தியவாறு ஆயிற்று. ஆதலின், 'நன்னலம் பெற நிறைந்த ஞானம்' ஞானமோ அன்றோ என்னும் ஐயப்பாடு பற்றிய தேற்றேகாரமும் அன்று. வினாவேகாரமும் அன்று. ஞானம் ஞானம் என்பது புனருத்தியாதலின் ஈற்றசையேகாரமும் அன்று.

இத்திருவிருத்தத்தினுள் வந்த உவமம் நன்கு தெளியாவிடின் உவமேயம் இனிது விளங்காது. படிகம் தன்னை அடுத்தவற்றின் நிறங்களையுங் கவரும். அவை அடுத்திருப்பினும் தன்னிறமே காட்டும். இவ்வீரியல்பும் அப்படிகத்திற்குக் கதிரவனொளியின்றேல் இல்லை. உயிர் தன்னைச் சார்ந்த பாசத்தியல்பையும் காட்டும். தன்னியல்பையுங் காட்டும். இவ்வீரியல்பும் அவ்வுயிர்க்குப் பதி ஞானம் இன்றேல் இல்லை. சிவஞானமே திரோதான சத்தியாய் நின்று உயிர்க்குக் கட்டுப்படுத்துகின்றது. சிவ சத்தியா(கியதானேயா)ய் நின்று வீடுதவுகின்றது. இவ்வாற்றால், கதிரொளி உவமையாயிற்று. இதனை,

''தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போல் மன்னிறமிப்பூ''

என்னுந் திருவருட்பயன் (55) இனிதுணர்த்துதலறிக.

தனக்கென்று பிறிதோரொளி தோன்றாதவாறு கதிரொளியைக் கவர்ந்து கொள்ளும் படிகத்தூண்போலத் தன்பால் இருள் தோன்றாதவாறும் தற்போதம் உதியாதவாறும் தன்னைத் திருவருளிற் கொடுத்தல் வாயிலாக அதனைக் கவர்தல் வேண்டும்.

'தனக்குநிழல் இன்று ஒளிகவருந் தம்பம்
எனக்கவர நில்லா திருள்'

என்றதும் அத்திருவருட்பயனே. 'கவருந்தம்பம்' என்றும் 'கவர இருள் நில்லாது' என்றும் முறையே படிகத்தின் வினையும் உயிரின் வினையுமாகக் கூறியதுணர்க. தாமே தருமவரைத் தம் வலியால் தந்தவராகக் கருதலாகாதெனினும், கண்டபடியே கண்டு காணாமை காணாமற் கொண்டபடியே கொண்டிருத்தல் உயிர்க்குண்டென்க.

பளிங்குவமை பெத்தமுத்திப் பண்புற்றங் காவி
விளங்குதலின் ருகா வியப்பு

என்ற சித்தாந்தப் பஃறொடை (516)யும்,

பளிங்கொளியே வன்னத்தைப் பற்றிப் பளிங்கு
விளங்குதலைச் செய்யா விதிபோல்—களங்கமலத்
தூற்றபோ தாவி யுறுமலமாய்த் தீப்பிறவி
பற்றிநிற்கும் என்றதனைப் பார்

என்றும் (45),

படிகம் ஒருபொருளைப் பற்றிவிட் டுப்பற்றி
முடியி னொருபொருள்மேல் முற்றும்—கெடிய
மலம்ஒருகால் ஆவி மனுஒருகால் ஈச
னிலைஒருகால் என்ன நிலை

என்றும் (72),

பன்னிறத்தோ டொத்த படிகம் பகல்நடுவிற்
தன்னிறமே கண்ட தகைமையென—மன்னிறந்தான்
உற்றபோ தாவிக் குபாதிஅற்றுத் தன்இயல்பே
பெற்றிடுவ தாகப் பெறும்

என்றும் (73),

பற்றும் படிகமது பற்றைவிட்டுப் பற்றியபின்
முற்றும் ஒருபொருளை முற்றினல்—மற்றொன்றைப்
பற்ரு ததுபோற் பரசிவத்தோ டொன்றுபட்டங்
குற்ருர்க் கிலைபிறிதென் றோர்

என்றும் (74),

சுத்தப் படிகமெனத் தோய்வற்ற போதாவி
சித்தியமே என்ன நிகழ்த்தித்தன்—சத்தியோ
டொன்ருய் அனுபவித்தங் குற்றதனை நோக்கிப்பின்
நின்ருவ தன்றே நிலை

என்றும் (77),

மாற்றும் பளிங்கொன்றை மாற்றுமோ உச்சியின்மேல்
தோற்றும் கதிர்வந்து தோற்ருக்கால்—போற்றும்
உடலனைத்துந் தீர ஒழிப்பார் ஆர்? ஈசன்
தடையனைத்துந் தீரானேல் தான்

என்றும் (86),

பற்றைவிட்டுப் பற்றும் படிகங் கதிரகன்று
நிற்றலின லன்றோ நினையுங்கால்—மற்றதுபோல்
தொட்ட அரனே தொடாதவற்றால் ஆவிமுதல்
விட்டதனைத் தேகும் விரைந்து

என்றும் (87) வரும்.

பன்னிறம்வந் துற்ற படிகம் பலவனமாய்த்
தன்னிறமே காட்டுந் தகைமைஎன—மன்னிறம்வந்
தொட்டியபோ தாவி ஒடுங்கிவிளங் காததனுல்
நட்டமே இல்லைஎன நாடு

என்றும் (204) வரும் அநுபோக வெண்பாக்களும் இப்படிக வுவமையொன்றே பற்றிக் கூறிய திறத்தை அறிதல் சால விளக்கந்தரும். (தொடரும்)

---

4. சமயப் பகுதி

நமது சமய நிலை

(ம. ரா.)

நமது சமயம் எந்த நிலையில் இருக்கிறதென்று நாம் அறிவோமா? தற்போது நமது சமயங்களைப் பற்றி எதிர்ப்புகள் நிரம்ப ஏற்படும்போதாவது நமது சமயம் என்ன நிலையில் இருக்கிறதென்று நாம் சிந்திக்கின்ருேமா? அதுதான் இல்லை. சமயம் எக்கேடு கெட்டாலென்ன, நாம் சுகமாய் வாழ்ந்தால் போதுமென்று எண்ணிக்கொண்டு நமது மக்கள் வாளாயிருக்கின்ருர்கள். வேறு சமய மக்கள் இவ்விதமாக இருக்கிருர்களா? தங்கள் தங்கள் சமயங்களைப் பெருக்குவதைக் குறித்து அவர்கள் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறதில்லையா? சமயங்களில் ஈடுபட்டிருக்கின்ற வர்கள் அதே கருத்தாய்க் கொண்டு தம்மால் ஆனவழியில் பாடுபட்டுக்கொண்டே யிருக்கின்ருர்கள். நாள்தோறும் சமயம்பெருக வேண்டுமென்ற கொள்கையோடு அவ்வப் போது சமய வேலையின் எண்ணிக்கையைக் குறித்துக் கொண்டு வெளியிட்டும் வருகிருர்கள். நமது சமயங்களில் இவ்விதமான வெளியீடு உண்டா?

இராமகிருஷ்ண மிஷன் ஒன்றைத் தவிர மற்றப் பண்டைச் சமயங்கள் எவ்விதமான வெளியீட்டையும் பதிப்பிப்பதில்லை. அவ்வாறு வெளியீடுகள் பதிப்பித்தாலன்றி அடுத்த ஆண்டில் என்ன விருத்தி செய்ய முடியும் என்று சிந்திக்க முடியாது. அதற்காகப் புள்ளி விவரங்கள் கொண்ட வெளியீடு மிக அவசியம் அல்லவா ?

2. **புள்ளிவிவர வெளியீடு :** மற்றச் சமயங்களில், சிறப்பாகக் கிறிஸ்துவத்தில் அவ்வப்போது புள்ளி விவரங்கள் வெளியிட்டு வருகிறார்கள். அதைக்கொண்டு அச்சமயத்தார் என்னவேலை செய்திருக்கிறார்களென்று அறியமுடிகின்றது. அவர்களில் காதலிக் சமயத்தவர்களும் பிராடஸ்டண்ட் சமயத்தவர்களும் தனித்தனியாகத் தம் தம் வெளியீடுகளைப் பிரசுரிக்கின்றார்கள். அவைகளில் காதலிக் சமயத்தார் 1948–ல் வெளியிட்டிருக்கும் பிரசுரத்தின்படி காணும் சில புள்ளிவிவரங்களை இங்கே எடுத்துக் காட்டாகக் கூறுவோம்.

அந்நூலில் அச்சமயத்தார்கள் ஏற்படுத்தி யிருக்கும் தேவாலயங்களின் தொகை, பிரசார நிலையங்களின் தொகை, குருக்களின் எண்ணிக்கை, பிரசார மாணாக்கர்களின் எண்ணிக்கை, அவர்கள் வைத்து நடத்தும் ஆண், பெண் பாடசாலைகளின் விவரங்கள், மாணவர் விடுதிகள், உணவு விடுதிகள், வைத்தியசாலைகள், அனாதை விடுதிகள், கைத்தொழில்சாலைகள் முதலான விவரங்களும், அவைகளில் ஈடுபட்டிருக்கும் சமயபோதகர்களின் விலாசம் முதலிய விவரங்களும், அவர்கள் வெளியிடும் பத்திரிகைகளின் விவரங்களும், மற்றும் பல குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிதாகச் சமயங்களில் சேர்ந்தவர்களின் தொகையும், சமயபோதனையின் விவரங்களும் அதில் அறியக்கூடும். இவ்விதமான விவரங்கள் இருப்பதினால் இப்போதிருப்பதற்குமேல் என்ன வேலை செய்ய முடிகிறதென்பதும் எளிதில் அறியலாம். சமயத் தொண்டில் ஈடுபடுகிறவர்கள் ஒருவருக் கொருவர் எளிதில் அறிமுகம் செய்துகொள்வதற்கு அவரவர்கள் விலாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான விவரங்கள் தென்னாட்டுச் சமயங்களில் எதற்காவது கொடுக்க முடியுமா ? நமது நாட்டில் படித்த

வர்களில் எத்தனைபேர் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்? இவர்களில் ஒரு பகுதியாரையாவது சமயப்பணியில் நிறுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டத்தில் ஒருபகுதியேனும் குறைவுபடும். சமயம் வேண்டாம், கோயில் வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள், ஏற்கனவே ஈடுபட்டிருக்கும் ஓரளவு வேலையுமில்லாமல் செய்துவிடுவார்கள்.

இந்த அறிவு வேலைக்கு மாறாக சமயவேலையைப் பெருக்கி வைப்பின் இன்னும் கணக்கற்ற மக்களுக்கு வேலை கொடுத்து வரக்கூடும். நாகரீகத்தில் சிறந்த அமெரிக்கர்கள் சமயவேலைகளை நாள்தோறும் பெருக்கிக்கொண்டு கணக்கற்ற பேர்களுக்கு வேலையும், ஊதியமும் தந்து வருகிறார்கள். நமது நாட்டிலோ சில எதிர்ப் பிரசாரகர்கள் இதனை வெறுத்து, இருக்கிறதையும் போக்கடிக்க முயலுகிறார்கள். இது பேதமையல்லவா?

3. ஆலயங்களும் குருக்களும்: காதலிக் சமயத்தார்கள் தமிழ்நாட்டை ஒன்பது பிரிவுகளாகவும், ஈழநாட்டை இரண்டு பிரிவுகளாகவும் பிரித்துக்கொண்டு தமது சமயத் தொண்டு செய்கிறார்கள். தமிழ் நாட்டில் குருக்கள்மார் கொண்ட ஆலயங்கள் 355-ம், குருக்கள்மார் இல்லாத ஆலயங்கள் 1883 ம், வைத்து நடத்துகிறார்கள். மேலும் பிரசார நிலையங்கள் 285-ம், பயிற்சி நிலையங்கள் 190-ம் வைத்திருக்கிறார்கள். ஈழநாட்டிலோ குருக்கள் கொண்ட ஆலயங்கள் 54-ம், குருக்கள் இல்லாத ஆலயங்கள் 238-ம் இருக்கின்றன. மேலும் பிரசார நிலையங்கள் 54-ம், பயிற்சி நிலையங்கள் 33 ம் இருக்கின்றன. மேலே கூறிய சமயநிலையங்களில் தமிழ் நாட்டில் 1019 குருக்கள்மாரும், 2509-பெண் சேவிகைகளும் பாடுபட்டு வருகிறார்கள். ஈழநாட்டிலோ 139 குருக்களும், 258- பெண்களும் வேலைசெய்து வருகிறார்கள். இந்தத் திருப்பணியாளர்களின் பெயர்கள், விலாசங்கள், சமயப் படிப்பு விவரங்கள் முதலியவைகள் எல்லாம் அந்த நூல் வெளியிட்டிருக்கின்றது.

இத்தகைய சமயத் தொண்டர்கள் செய்து வரும் சேவையானது தமிழ் நாட்டில் 8,11,344 காதலிக்கர்களுக்கும், ஈழநாட்டில் 79,904 காதலிக்கர்களுக்கும் செய்யப்படுகின்றது என்று அறியவேண்டும். ஆகவே சராசரி 250 பேருக்கு ஒரு குருக்கள்மார் இருக்கின்றார்கள் என்று அறிய

லாம். ஆலயங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் 4000 மக்களுக்கு ஓர் ஆலயவிழுக்காடு இருக்கிறதென்று அறியலாம்.

இனி இக் கணக்குப் புள்ளிகளுக்கு நமது சைவ, வைணவ நிலைமையை ஒத்திட்டுப் பார்க்க முடியுமா? எவ்வளவு பேருக்கு எவ்வளவு ஆலயங்கள் உண்டு என்பதாவது, எத்தனை குருமார்கள் சமயத்தைப் பரப்புவதற்கு ஏற்பட்டிருக்கிறார்கள் என்பதாவது கூறமுடியுமா? முதலில் ஆலய எண்ணிக்கை சிறிதேனும் போதாது என்னலாம். சமயப் பிரசாரமோ நமது குருக்கள்மார்களால் ஒரு சிறிதும் செய்யப்படுவதில்லை யென்றே கூறலாம். இந்து சமயக் குருக்கள் சடங்குகளுக்காகவே அன்றிச் சமயப் பிரசாரத்திற்காக வேலை செய்வதில்லை யென்று அறிவோம்.

4. சமயக் கல்வி : சமய நிலையங்களைப் பரிபாலிப்பவர்களுக்கும், சமய போதனை செய்பவர்களுக்கும் சமயப் பிரசாரம் செய்பவர்களுக்கும் சமயக் கல்வி அவசியமாகும். இந்திய நாட்டில் சமயக் கல்விக்கென்ற தனித்திட்டம் இல்லை. சைவத்திலும், வைணவத்திலும் அவ்விதக் குறைவு இன்றும் உண்டு. சில மடங்களில் மட்டும் சமயக் கல்வி போதிக்கப்படுகின்றது. அக் கல்வி, மடத்து ஆள்களுக்கும் கூடப் போதாமல் இருக்கின்றது. நாட்டில் ஆயிரக் கணக்காய்ப் படர்ந்திருக்கும் கோயில்களில் தொண்டு செய்யும் ஆட்களுக்குச் சமயப் படிப்பு என்பது ஒரு சிறிதும் கிடையாது. கோயில் பரிபாலனம் ஏற்றுக்கொண்டிருக்கும் பகுதியார்களுக்கும், அலுவலாளர்களுக்கும் சமயப் படிப்பு சிறிதும் கிடையாது. அப்படியிருக்கையில் எவ்வாறு சமய நிலையங்கள் ஒழுங்காக நடத்தப்படும்?

ஆனால் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களிலோ அவ்விதம் இல்லை. சமயக் கல்லூரிகளில் தேர்ந்தவர்கள்தான் அத் தொழிலுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

கிறிஸ்தவர்களில் (பி. டி.; டி. டி.) என்ற பட்டங்களும், இஸ்லாமியருள், மௌலானா பட்டம் பெற்றவர்களுமே குருக்கள்மாராக நியமிக்கப்படுவார்கள். அவர்களே போதனை செய்யத் தகுந்தவர்கள். தமிழ் நாட்டிலோ, காதலிக் ஆலயங்களில் போதிக்கும் குருமார்களில் உயர்ந்த பட்டங்கள் பெற்றவர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரிய பட்டம் பெற்றவர்கள் வெளி

நாட்டுக் கலாசாலைகளில் படித்தவர்களா யிருப்பார்கள். அது போதாது என்று சொல்லி, தமிழ் ஜில்லாக்களிலே அநேகக் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தி அவைகளில் இளைஞர்களுக்குச் சமயக் கல்வி தருகிறார்கள். அப்பேர்ப்பட்ட கல்விச்சாலைகள் ஒன்பது தமிழ் வட்டங்களில் 190-ம், 2 ஈழ நாட்டு வட்டங்களில் 33-ம், சமயப் பயிற்சிகள் கொடுக்கின்றன. இவைகளில் ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு நிலையங்கள் உண்டு. அவ்வாறு கல்வி பெற்றுச் சமயத் துறையில் ஈடுபடுகின்றவர்கள் மணம் செய்துகொள்ளக் கூடாது. பிரமச்சாரிகளாகவும், கன்னியர்களாகவும் இருக்கவேண்டும். மிகச் சிறந்த ஒழுக்கம் கைப்பற்றும்படியாகக் கற்பிக்கப்படுவார்கள். இப்படிக் கடுமையான பயிற்சி பெற்றவர்களே சமய வேலையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். இவ்விதம் சமயக் கல்வித் திட்டம் தமிழ்நாட்டுச் சமயங்களில் எப்போது ஏற்படப் போகிறதோ ?

5. போதுக் கல்வி : தமிழ் நாட்டில் பொதுக் கல்வி நிலையங்கள் சாதாரணமாக அரசியலாராலும், நாட்டு, நகர சபையாராலும், பொதுமக்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. சமய நிலையங்களாகிய கோயில்கள், மடங்கள் முதலியவைகளால் வெகுவாக நடத்தப்படுவதில்லை. திருப்பதி, திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மயிலம் முதலிய சில சமய நிலையங்கள் மட்டும் இத்துறையில் ஈடுபட்டிருக்கின்றன. மற்ற ஆயிரக்கணக்கான நிலையங்கள் யாதொரு கல்விச் சேவையும் செய்வதில்லை.

ஆனால் கிறிஸ்தவர்களோ பெருமிதமான சேவை செய்துவருகிறார்கள். கிறிஸ்துவப் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி ஏனைய சமயப் பிள்ளைகளுக்கும் அவர்கள் பொதுக் கல்வி போதிக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள 9 வட்டங்களில் காதலிக் சமயத்தார்கள் 469 ஆண்பாடசாலைகளும், 215 பெண்பாடசாலைகளும், 283 கலப்புப் பாடசாலைகளும் நடத்துகிறார்கள். ஈழநாட்டு 2 வட்டங்களில் 145 ஆண் பாடசாலைகளும், 70 பெண்பாடசாலைகளும் நடத்துகிறார்கள். இந்தச் சேவை மிகவும் சிறந்த சேவையல்லவா ?

அவர்கள் செய்யும் கல்வித் தொண்டினை மேலும் விவரிப்போம். தமிழ் நாட்டில் 2 கல்லூரிகளில் 7028 பிள்ளை

களும், 15 உயர்தரப் பள்ளிகளில் 15,000 பிள்ளைகளும், 9 நடுத்தரப் பள்ளிகளில் 1000 பிள்ளைகளும், 708 கீழ்த் தரப் பள்ளிகளில் சுமார் 70,000 பிள்ளைகளும் படிக்கிறார்கள். மேலும் பெண்பாடசாலைகளில் ஒரு கல்லூரியில் 1236 பெண்களும், 31 உயர்நிலைப் பள்ளிகளில், 15,000 பெண்களும், 14 நடுப் பள்ளிகளில் 42,000 பெண்களும், 187 கீழ்த்தரப் பள்ளிகளில் 18,000 பெண்களும் வாசிக்கிறார்கள். இதைத் தவிர 23 உணவு விடுதிகளில், 2300 ஆண்களும், 51 பெண்விடுதிகளில் 5100 பெண்களும் படிக்கிறார்கள். அனாதை ஆசிரமங்களில், 17 நிலையங்களில், 1700 ஆண்களும், 47 நிலையங்களில், 4700 பெண்களும் கல்வி கற்கிறார்கள். இவை தவிர கைத்தொழில்சாலைகளில் 10 ஆண்சாலைகளும், 18 பெண்சாலைகளு மிருக்கின்றன. மேலும் 10 பயிற்சிச்சாலைகளும் உண்டு. இதை நினைத்துப் பாருங்கள். காதலிக் சமயத்தார் செய்யும் சேவை எத்தனை சிறப்புடையது? நமது சமயங்களில் இவ்வாறு உண்டா?

6 போது அறச்சாலைகள்: பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் ஆலயங்களை ஒட்டிக் கல்விச் சாலைகளேயன்றி வைத்திய சாலைகளும் இருந்தன என்று கோயிற் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இப்பொழுதோ எந்த ஆலயத்தை ஒட்டியும் ஒருவைத்தியசாலையும் இல்லை. ஒன்றிரண்டு மடங்களில் மட்டும் சிறிய வைத்தியசாலைகள் வைத்திருக்கிறார்கள் ஆனால் பிற மதத்தார்கள் வைத்திய சாலை வைப்பது தங்கள் கடமைகளில் ஒன்று என்று உணர்ந்து அவ்வாறு செய்து வருகிறார்கள். சமயபோதனை ஆன்மாவுக்கு ஏற்பட்டால் வைத்திய சிகிச்சை உடலுக்கு ஏற்பட வேண்டாமா? அதை எண்ணித்தான் காதலிக் சமயத்தார்கள் தமிழ் நாட்டில் 71 வைத்திய சாலைகளும் ஈழ நாட்டில் 5 வைத்தியசாலைகளும் வைத்திருக்கிறார்கள். அவ்வைத்திய சாலைகளில் தமது சமயத்தார்களுக்கு மட்டுமேயன்றி, எல்லாச் சமயத்தார்களுக்கும் சிகிச்சை தருகிறார்கள். வைத்தியசாலைகளிலே சாதாரண மருத்துவ மட்டுமன்றிப் படு நோய்களாகிய குஷ்டம், க்ஷயரோகம், கண்நோய் முதலியவைகளுக்கும் சிகிச்சை தருகிறார்கள். இப்படிப்பட்ட தொண்டு மிகச் சிறந்த தொண்டு என்று நாம் அறியவேண்டும்.

7. அச்சகமும் பத்திரிகைகளும்: சைவ வைணவங்களில் சமயப் பத்திரிகைள் மிகக் குறைவு. எண்ணிக்கையும் குறைவு. படிப்பதும் குறைவு. ஆனால் கிறிஸ்தவர்களில் அந்தத் தொண்டு மிகச் சிறந்திருக்கின்றது. இந்தியா முழுவதும் கணக்கிட்டால் காதலிக் சமயத்தார்கள் 128 பத்திரிகைகள் நடத்துகிறார்கள். அவைகளில் தமிழ்ப் பத்திரிகைகள் 18. அவற்றில் வாரப் பத்திரிகை ஒன்று. வாரத்திற்கு இருமுறை ஒன்று. மாதப் பத்திரிகை 14 மும் மாதப் பத்திரிகை ஒன்று. ஆண்டுப் பத்திரிகை ஒன்று. ஆக 18 பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. இவைகளைச் சமயக் கல்வியில் தேர்ந்தவர்களே நடத்துகிறார்கள். சிறப்பாகப் பயிற்சி பெற்ற பாதிரிமார்களே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இப் பத்திரிகைகளைக் கிறிஸ்தவக் குடிகள் பெரும்பான்மையோர் வரவழைத்து வாசிக்கிறார்கள்.

ஆனால் சைவத்திலோ அல்லது வைணவத்திலோ எத்தனைச் சமயப் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன? அவைகள் சொற்ப விலைக்குக் கிடைப்பினும் எத்தனைபேர் வாங்கி வாசிக்கின்றார்கள். இப்படியிருந்தால் சமயத் தேர்ச்சி எவ்வாறு வலுக்கும்? மேலே கூறிய கணக்குப் புள்ளிகளை நமது சமய மக்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வெறும் பகட்டுப் பெருமைக்காகச் சமயத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று சொல்லுவதில் பயனில்லை. உண்மையாகச் சமயத்தொண்டு செய்யும் பட்சத்தில் மேலே கண்ட காதலிக் சமயத்தார். தொண்டைப் போலவே நாமும் செய்யவேண்டியது நம்முடைய கடமையல்லவா?

———

8. விரிவுரைப் பகுதி

"சேஷாத்திரி சுவாமிகள்"

(அ. தா. ப. திருஞானசம்பந்தம்)

தோற்றுவாய்: நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழிலொழுகும், சீராரும் வதனமெனத் திகழ்பரதகண்டமதில் தக்க சிறு பிறைநுதலும், தனித்த நறுந்திலகமும் எனத் திகழ்வது தமிழகமாகிய நம் தாய்த் திருநாடேயாகும்.

மற்ற நாட்டு மக்களெல்லாம், இலை உடைதரித்து, மரங்களிலே மந்திகளைப் போன்று மன்னி வாழ்ந்த தருணத்தில், தமிழக மக்கள், நெடுந்திரை பிளந்து நாவாய்ஓட்டினர்; கடலினின்றும் முத்தையும், பவழத்தையும் நாட்டிலே கொண்டு குவித்து, அமரர் நாடாக்கினர். இத்தகைய சிறப்பை வெகு அழகாகப் பண்டைய இலக்கியங்கள் எடுத்துப் பகர்கின்றன. மக்கள் எவ்வளவு நனி நாகரீகர்களாகத் தமிழகத்தில் அதுகாலை வாழ்ந்தார்கள் என்பதை நன்கு அறிகிறோம். இன்றைய வரலாற்று நூல் எழுதப்புகும் மேனாட்டு அறிஞர்களும், தமிழக மக்க்ள் சீரும் சிறப்புடன் வாழ்ந்ததை ஆராய்ச்சிக் கண்கொண்டறிந்து, உண்மையை உள்ளவாறு ஒத்துக்கொண்டு அனைவருக்கும் அதை அறியும்படி விளக்கி நூல்களும் எழுதுகின்றனர். நாகரிகச் சிறப்பால் தமிழர்கள் உயர்ந்தார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அவர்கள் வாழ்வைத் தூய்மை செய்யத் தவச் செல்வர்கள் பயன்பட்டார்கள். நல்ல அறிவோடு மக்கள் வாழ்தலைத்தான் நாகரீக வாழ்வு என்று அறிஞரானோர் ஒப்புக்கொள்வர். அங்ஙனமல்லாது, உடையால், அணியால் பிறவற்றால் சிறப்புறுதல் நாகரிக வாழ்வே அல்ல. ஆத்மஞானம் கைவரப்பெற்ற சான்ற சீலர்களால்தான் இந்தியா, சிறப்பாகத் தமிழகம் அன்றும் இன்றும் சிறப்புடன் விளங்கிவருகிறது. தமிழகத்தைப் பேசவந்த புலவர் ஒருவர் "தவமுனிவோர் பலர் தவழ் நாடு" என்று கூறி உண்மையை அறியுமாறு நம்மை விடுகிறார். தூய வாழ்வுடைய முனிபுங்கவர்களின் கூட்டத்தின் ஈட்டம், எந்நாளிலும் நம் நாட்டிலேதான் உண்டு. சுவாமி விவேகானந்த அடிகளும் ஒருமுறை பேசும்பொழுது "மேலை நாட்டு மக்களிடம் இருந்து விஞ்ஞானம் சம்பந்தமாக ஒரு சில அறிய நாம் அவர்களை நாடவேண்டும். அக்கருத்துக்களெல்லாம் நம்மிடமிருந்து கொள்ளையடித்துச் சென்ற நூல்களில் உள்ளவையே. ஆனால் ஆத்மஞானம் பற்றிய மேனாட்டுமக்கள் அறிந்துகொள்ள இந்தியாவிடம் என்றும் பிச்சையே எடுக்க வேண்டும்" என்று கூறியது ஈண்டுக் குறிப்பிடத்தகுந்தது. எனவே நம் நாட்டிலே என்றும் தவ ஞானிகளுக்குக் குறைவில்லை என்பதை உணர்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானச் செல்வர்கள் பலருள், சேஷாத்திரி சுவாமிகளும் ஒருவராவர். அவர்

மக்களுக்கு ஞானவாழ்வு அளித்தவர். அவர் வரலாற்றைப் பற்றிச் சிறிது இனிக் காண்போம்.

வரலாறு : சேஷாத்திரி சுவாமிகள் தொண்டைவள நாட்டிலே காஞ்சிபுரம் என்னும் பதியில் தோன்றினர். இப்பதியானது ஒருபெரும் பாடல்பெற்ற தலமாகும். அன்றியும் அறிவுசான்ற புலவர் பெருமக்களை யளித்த பெற்றி அந்நகர்க்கு உரித்து. சுவாமிகள் 1870-ம் ஆண்டு சனவரித்திங்கள் 22ந்தேதி வரதராஜ அய்யர் என்கிற தந்தைக்கும், மரகதம்மாள் என்கிற தாய்க்கும் புதல்வராக அவதாரம் செய்தார். இவர் நாளொரு மேனியும், பொழு தொரு வண்ணமும் கொண்டு வளர்ந்து, குழந்தைப் பருவம் நீத்து, பிள்ளைமைப் பருவம் எய்தினர். இவர் தோன்றிய குலம் அந்தணர் குலமாகும். முன்பு செய்தவத்தின் ஈட்டம் முறைமையால், கைவரப்பெற்ற, சுவாமிகள் ஆசிரியரை அடுத்துப் பாடங்கேட்குங்கால், ஆசிரியர் கூறுவதை செவி வாயாகப் பெற்று உண்டு, அக்கருத்துக்களையும் துணை யாகப் பெற்று ஞானப் பாதையைத் தேடுவாராயினர். ஞானச் செல்வராகிய காரணத்தால், நாளும் நாளும் ஆசிரியரிடம் சென்று பயில்வதை விடுத்து, அகக்கண்கள் திறக்கப்பெறவே உண்மையை உறுதியாக உணரலானர். நல்ல கல்வி முற்றியபோதிலும், உலகியல் துறையில் இவர் மனம் செல்லவில்லை. எப்பொழுது பார்த்தாலும் இவர் ஆத்ம விசாரத்தில் இறங்கியவராய்ப் பித்தம் பிடித்தவர் போல் திரிந்து வருவாராயினர். இங்ஙனம் பக்குவப்பட்ட மனோநிலை பெற்றுத் திகழுங்கால், அருள் அண்ணாமலை இவரைத் தன்பால் ஈர்த்தது. ஞானத் தபோதனர்களை நாடொறும் வா, வா, என்றழைக்கும் மலை அண்ணாமலை அன்றோ! ஞானத்தின் திருவுருவாய், தவத்தின் அருளுரு வாய்த் திகழ்ந்த பெரியாரை அண்ணாமலை தன்பால் அழைத் துக்கொண்டதில் வியப்பொன்றுமில்லை. ஞான நிட்டை கூடத் தகுதிவாய்ந்த இடம் திருவண்ணாமலை என்பதை உணர்ந்த சுவாமிகள் பெற்ற மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டாமோ?

திருவண்ணாமலை தன்னிடம் ஈர்த்த அடியார்களின், கூட்டத்தின் ஈட்டம் பெரியது. அண்மைக் காலத்தில் அந் நகர் தன்னிடம் அழைத்த தவச் செல்வர்கள் இருவர். ஒரு

வர் சேஷாத்திரி சுவாமிகள்: மற்றவர் இரமண சுவாமிகள். முன்னவர் ஊருக்கு வடக்குத் திசையினின்றும் போந்தவர். பின்னவர் ஊருக்குத் தெற்குத் திசையினின்றும் போந்தவர். ரமண சுவாமிகள் வருகைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னமே வந்தவர்தான் சேஷாத்திரி சுவாமிகள்.

தகுந்த சீடர்கள் சுவாமிகளுக்கு வாய்க்கப்பெறாத காரணத்தால், அவர்புகழ் குடத்துள் வைத்த விளக்கென மங்கியே போய்விட்டது. சில போலிகள் தங்களைச் சீடரென்று பிதற்றிக்கொண்டு, உழைக்காது உட்கார்ந்து வயிறு வளர்த்து வருகின்றனர். சுவாமிகள் உயர்வை நன்கறியாத மக்கள் அவர் பெயரையும் மறந்து வருவதாகத் தெரிகிறது. ஒரு பெரும் ஞானி இராமகிருஷ்ணபரமஹம்சர் பெயரையும், புகழையும் நிலைநாட்ட ஒரு விவேகானந்த அடிகள் வாய்த்தார். இரமணரின் புகழையும், அவர் தம் ஆத்ம விசாரக் கருத்துகளையும் வெளிப்படுத்த, இந்நாட்டில் மட்டுமன்றி அயல் நாடுகளிலும் சீடர்கள் தோன்றினார்கள். அஃதேபோல் யோகி—அரவிந்தரின் கருத்துக்களை வெளிப்படுத்தி அவர்தம் புகழை நிலைநாட்டப் பல அறிஞர்களும் சீடர்களும் முன் வந்தனர். ஆங்கிலக் கல்வியும், தன் முற்பகுதி வாழ்வும்—அரசியல் வாழ்வும்—அன்னாருக்கு விளம்பரத்திற்குத் தகுதியாக இருந்தது. அந்தோ! என்ன விதிவசமோ தெரியவில்லை. நமது சுவாமிகளுக்கு நல்ல ஒரு சீடர் தோன்றி அவர் புகழைக் குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிரச் செய்வதற்கு உரிய வாய்ப்பு இல்லாமற் போனது. இந்தியாமட்டுமின்றி உலகத்திற்கே ஒரு குறை என்று சொல்ல வேண்டும். உலக மக்கள் இன்புறும் பொருட்டு, அவர் ஓரிடத்தில் அமர்ந்து கற்பனை நயங்கள் தோன்றவோ, படிப்பவர்களை மயக்கித் தன் பக்கல் இழுத்துக் கொள்ளவோ தகுந்த நூல்கள் பல எழுதிக் குவித்தாரில்லை. மிக எளிய முறையில் எல்லோரும் கடைபிடித்து நடக்கக் கூடியதான ஒரே வழியை, முதன் முதலில் இவர் விளக்கிக் காட்டியுள்ளார். அஃதே ஆத்ம விசாரணை என்பதாம். இவரைப் பின்பற்றியே இரமண சுவாமிகளும் அவ்வழியில் இலகுவில் இறங்கினர் என்று கூறுவர். திருவண்ணாமலை பாடல் பெற்ற ஊர் என்பது ஓர் புறம் இருந்தாலும், அண்மைக் காலத்தே

வாழ்ந்த சேஷாத்திரி சுவாமிகளாலும், இரமண சுவாமிகளாலும் அதன் புகழ் பெருகிற்று.

சுவாமிகள் தோற்றப் பொலிவும் மக்கள் அவரிடம் கொண்ட ஈடுபாடும் : சேஷாத்திரி சுவாமிகளைக் கண்டோர், ஞானிகள் என்போர் இப்படிப்பட்ட நிலையில்தான் காலத்தைத் தள்ளுவரோ என்ற எண்ணம் எழாதிருக்க முடியாது. ஒல்லியான உருவம் ; சற்று முன் சாய்ந்த உடல் ; ஆழ்ந்த சிந்தனையுள்ள உள்ளத் தோற்றம் ; முகத்தின் பொலிவு ; அம்முகத்தில் உரோமங்கள் அணி செய்யுங் காட்சி ; இடையிலே சில சமயங்களில் ஆடையும் மற்ற சமயங்களில் கோவணங் கொண்ட நிலை ; இத்துடன் பித்துப் பிடித்தவர் போல் ஏதோ ஞான ஏக்கங் கொண்டவர் போல் தன்னையும் அறியாது தெருவில் நடமாடும் காட்சி ; எப்பொழுதும் தானே சிரித்துக்கொண்டு, சிறிது நேரங் கூட பகற்பொழுதில் ஓரிடத்தில் அமராது வாழ்ந்தவரே சுவாமிகளாவர். இதுவே சுவாமிகளைப் பற்றிய கருத்தோவியமாகும். சித்தரித்துக் காட்டி, சிந்தனையை எழுப்புவதற்காகப் புனைந்து கூறும் கற்பனை ஓவியமல்ல இது. மேற்கண்ட காட்சியே திருவண்ணாமலை மக்களை ஆச்சரியப் படச் செய்தது. சுவாமிகள் தானே சென்று எந்த இடத்திலும், உணவை வற்புறுத்திக் கேட்டுண்ணும் பழக்கமின்றி, யாராவது கொடுத்தால்தான் உண்பது என்ற நியதியைக் கொண்டிருந்தார். நகரமக்கள் அவரிடம் மிகுதியாக ஈடுபாடு கொண்டிருந்ததால், வேளைக்கு அவருக்கு வேண்டிய உணவை மனங்கோணாது படைத்து வந்தனர். வீட்டில் இலை போட்டுப் பத்துவகைப் பதார்த்தங்கள் வைத்த அறுசுவை உண்டி உண்ண அழைத்தால் அவர் வருவதில்லை. தனக்குப் பசிநேரம் வரின், யாதாகிலும் ஓர் வீட்டெதிரில் நின்று கைதட்டுவார். அவ்வீட்டார் கொடுக்கும் பிச்சையை யேற்று வெளியேகுவார். எந்த வீட்டெதிரில் சென்று கையைத்தட்டினாலும், தவறாது அவருக்கு மக்கள் உணவு அளித்து வந்தனர்.

மக்களும் போலிச் சாமியார்களும் : பொதுவாக இன்று எல்லோரும் அறிவில் மேம்பட்டு நிற்பதாக நினைப்பு.

இதற்குக் காரணம் நம்மைப் பற்றி மிகுதியாக எண்ணிக் கொண்டு, சிந்திக்க ஓய்வு பெருததுதான். சிறப்பு வகையில் காணுங்கால், சாமியார்கள் பித்தம் தலைக்கேறியவர்கள் சைவர்கள் எனின் மிகையேயாகாது. எத்தனையோ குடும்பங்கள் சாமியார்களால் பறிபோயின. இன்றும் அத்தகைய நிலையில் உட்பட்டுள்ள குடும்பங்கள் பல. இதற்குக் காரணம் சாமியார்கள் என்று போலி உடை தரித்து வெளி வந்தது. அன்னூர் மூலிகைப் பழக்கம், பில்லி சூனியங்கள் வைத்தல், மயக்க மருந்துகள் செய்தல், செம்பை பொன்னுக்குவதாகக் கூறி ஏமாற்றும் வார்த்தைகள் இவை யனைத்தும் மேற்கொண்டிருந்ததால், சாமியார் மிகவும் பெரியவர் என்றெண்ணி மக்கள் தங்களை அவருக்கே உரிமையாக்கி விடுகின்றனர். பின்னர் என்னவெல்லாம் நேரும் என்பதை விளக்கவாவேண்டும்? அவ்வளவுதான்! ஓண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியான கதைதான். இதனுல் சில சமயங்களில் பெருங்குடும்பங்களிலுள்ளார் மானத்தை யிழக்க நேரிடுவதுமன்றி, மதிமோசமும் போகின்றனர். என்னே மடமை! மனம் திருந்தவில்லை; அறிவு நல்வழியில் செல்லவில்லை என்பதற்கு இஃதே ஓர் எடுத்துக்காட்டாகுமன்ருே! பெரியபுராணத்தில், அப்பூதியடிகள் நாயனர் புராணத்தில் நாவரசர் திங்களூர் சென்று, அப்பூதியாரை நோக்கி நீர் வைத்துள்ள தண்ணீர்ப்பந்தல், வெட்டிய குளங்கள், அமைத்த சோலைகள் இவற்றிற்கெல்லாம் " நும்பெயரெழுதாது வேருெரு பேர் முன்னெழுத வேண்டிய காரணமென்கொல்" என்று வினவியபொழுது அப்பூதியடிகளுக்குப் பிறந்த சினம் மிகக் கொடுமையானது. அச்சினத்தோடு, கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறியவர்தான் தம்மெதிரில் உள்ளார் என்பதை அறியாததால், அடிகள் எங்குறைவீர்! நீர்தாம் யார் என வினவினர். வினவியபொழுது " திருவேடத்துடனின்று " என்று கூறுவதை நாம் நோக்க வேண்டும். திருவேடத்தையும் பெரியபுராண அடியார்கள் கால மக்கள் நன்கு மதித்து, அதற்குரிய நல்லிடத்தையும் அளித்தனர். அதுகாலை திருவேடம் பூண்டு வாழ்ந்த மக்களில் பெரும்பாலோரும் உண்மை நெறி நின்ற தன்மையாளராய்த் திகழ்ந்தனர் என்பதை நன்கு அறிய முடிகிறது. இடைக்காலத்தே

அடியார்களென வேடம்பூண்டோர், முறை தவறிய வழி யில் செல்ல முனைந்தனர். நாளா வட்டத்தில் முறை தவறிய நெறிவளர ஆரம்பித்தது. அஃதே இன்று பெரி தும் கால்கொண்டிலங்குகிறது.

சுவாமிகளின் சில முக்கிய செயல்கள்: சுவாமிகள் ஒரு முறை கடைத்தெரு வழியாய்ச் சென்று கொண்டிருந்தார். அவ்வமயம் பலகாரக் கடைக்காரரொருவர் புதிதாகச் செய்த பலகார வகைகளை விற்பனைக்கு வெளியில் கொண்டு வந்து வைத்தார். அது சமயம் சுவாமிகள் அவ்விடம் சென்று பலகாரத்தட்டு ஒன்றை வெளியில் எடுத்து எறிந் தார். இதைக் கண்ட கடைக்காரர் கோபித்துக் கொண் டாரா என்ன? இல்லவே இல்லை! ஏன்? தனக்கு அன்று முதல் அதிர்ஷ்டம் பிறந்ததாகவே எண்ணினர். சுவாமிகள் எந்தக் கடையில் சென்று, சாமான்களைத் தொட்டுச் சென்ருலும் அன்று அக்கடைக்கு நல்ல வியா பாரம் நடக்கும் என்று நாளும் மக்கள் அதைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வதைக் கேட்கலாம்.

ஒரு சமயம் ஒரு மணமான அம்மையார் தெரு வழியே சென்று கொண்டிருந்தாராம். அது நேரம் சேஷாத்திரி சுவாமிகள் வருவதைக் கண்டு, ஓரமாகச் சென்ருராம். அந்த அம்மையார், ஏதோ வெறி பிடித்தவன் தன்னை நோக்கி வருவதாகக் கண்டு நடுங்கினராம். "அடுத்தது காட்டும் பளிங்குபோல்—நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்ற மொழிப்படி அம்மையாரின் நடுக்கத்தை உணர்ந்த சுவாமிகள் அவரிடம் சென்று பயப்படாதே என்று கையைப்பற்றி, சிறிது நேரத்திற்குள் அவ்விடம் விட்டு அகன்ருராம். அந்த அம்மையார் மனக் கலக்கத் துடன் வீடுசெல்ல, வீட்டார் ஏன் மனக் கலக்கம் என்று வினவ, நடந்த விபரத்தை அவர்களிடம் கூறவும் அவர் களும் கேட்டு இன்பம் அடைந்து, "இனி உனக்கோர் நல் லதிர்ஷ்டம் பிறக்கப் போகிறது" என்ருர்களாம். அதற் கேற்பவே அந்த அம்மையார், கலையாலும், பண்பாலும் உயர்ந்து சிறந்து வாழ்வதை இன்றுங் காண முடிகிறது. சுவாமிகள் வாழ்ந்தபோது அருணை மக்கள் ஒவ்வொருவரும், தன்னை அவர் முதுகில் தட்டவேண்டும் என்று வேண்டி நிற்பார்களாம். அவர் தட்டினுல் நல்வாழ்வு பெருகும்.

சுவாமிகள் அறிவித்த படிப்பினை :—சுவாமிகள் மக்களுக்கு அறிவித்த படிப்பினை ஆத்ம விசாரணைதான். அவர் இரவுக் காலத்தில், தூங்காமலே நிட்டைகூடி வந்தாராம். நானார், என்னுள்ளமார், ஞானங்களார், என்னை யாரறிவார் என்ற விசாரத்தில் அமர்ந்து காலங் கழிப்பதைக் கண்ட மக்கள், பெருவியப்பிற்குள்ளாயினர். நிட்டை கூடுதலும் அதன் வழி மனதைப் பண்படுத்த வேண்டுமென்றும், அப்பண்புள்ள மனத்துடன் வேகங் கெடுத்தாண்ட வேந்தனை சிந்திக்க வேண்டும் என்ற எளிமையான முறையையே மக்கட்கு அறிவுறுத்திச் சென்றார். சுவாமிகள் சக்தி உபாசனை வாய்ந்தவர். இவர் வெளியில் நடமாடும் நேரம் தவிர, அண்ணாமலையார் கோவிலுக்குத் தென்பால் சற்று தூரத்தில் உள்ள காமாக்ஷியம்மன் திருக்கோவிலுள்தான் ஞான நிட்டை கூடுவது வழக்கம். ஒரு நாள் உபாசனையில் இருந்த காலை, அம்பாள் நேரில் தோன்ற அவ்வம்மையைக் கண்டு சிரித்துவிட்டதாகவும், அதில் இருந்து பித்தம் தலைக் கேறியவனை யொத்து மாறிவிட்டார் எனத் தக்கோர் வாயிலாக அறியமுடிகிறது. அவர் வாழ்வில் மக்களுக்கு எடுத்துக்காட்டிய படிப்பினை யாதெனக் காணுங்காலத்து எளிய வாழ்வுடையவர்களாகி, அவ்வாழ்வில் காலத்தை வீணாய்க் கழித்துவிடாமல், ஆன்மா ஈடேறுதற்குரிய நன்முறையான தியானத்தை மேற்கொள்ளல் வேண்டுமென்பதேயாம்.

சுவாமிகளைப் பற்றி இன்றைய மக்கள் நோக்கு :—சுவாமிகள் நம்மிடையில் இருந்து திரிந்து வந்தவர்தானே! அவர் என்ன மக்களுக்காகச் செய்துவிட்டார்? ஏதோ எத்தனையோ காவியுடையணிந்த சாமியார்களைக் காணவில்லையா? அவர்களால் நாட்டிற்குப் பயன் உண்டா? ஒரு பயனும் இல்லை அல்லவா? இத்தகையோர்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை அல்லவா? என்பன போன்ற அடுக்குக் கேள்விகள் பல போட்டு, எல்லாச் சாமியார்களைப் போலவே, சேஷாத்திரி சுவாமிகளைப் பற்றி மக்கள் அவசரத் தீர்ப்பும் அளிக்க முயல்கின்றனர். அன்றியும் போலி வாதங்கள் எழுப்பி, அவரைப் பற்றிய தப்பெண்ணம் பாமரர்களிடம் வளர்க்கவும் ஒரு சாரார் முயல்கின்றனர். இத்தகைய நிலை நீங்கப்பெற்று, உள்ளத்தால் முற்கூறியோர் உயர்வார்களாக! சுவாமிகளின் ஆன்மநேய ஞானத் தொண்டை

நகரமக்கள் நன்கறிந்தார்களில்லை. சுவாமிகள் ஞானவாரமுதருந்திய ஞானி என்ற காரணத்தால்தான் பெரும்தவச் சிறப்புடன் வாழ்ந்த விட்டோபாய் என்பவராலும், இரமணராலும் போற்றப்பட்டிருக்கிருர். இவர் மனிதரில் மேம்பாடடைந்தவர் என்பதை அனைவரும் நன்குணர வேண்டும்.

சுவாமிகளின் சமாதி :—சுவாமிகள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்தான் இம்மண்ணுலக வாழ்வை நீத்துப் பிறப்பறுக்கும் வேந்தனின் இணையடிகளை அடைந்தார். இவருடைய சமாதியானது திருவண்ணுமலையிலிருந்து செங்கம் செல்லும் பாதையோரத்தில் அமைந்திருக்கிறது. இரமணுச்ரமத்திற்கு அருகாமையில் உள்ளது. இடம் வனந்திரம் போல் தோன்றுகிறது. சமாதியின் நாற்புறமும் செங்கற்சுவர்கள் எழுப்பப்பெற்று மேற்பகுதி மூடாமலே சில திங்களுக்கு முன்வரை இருந்தது. சுவாமிகளின் பெருமையைப் பரப்பியதின் மூலம் கிடைத்த பொருளால், மேற்புறம் மூடப்பெற்றது. இன்னும் அங்கு செய்ய வேண்டிய வேலைகள் மிகுதியாய் உள. அன்பர்கள் அதன்பால் அக்கறை கொள்வார்களாக! ஒரு அரும்பெரும் ஞானியின் பூதவுடற் சமாதி கேட்பார் அற்றுக் கிடக்கிறது. இதன் பெருமை யாதெனத் தெரிந்துகொள்ளத் தமிழக மக்களுக்கு வாய்ப்பில்லையே என்றெண்ணி, மனக்கலக்கங் கொள்ள வேண்டியுளது. காலத்தை வென்ற ஞானி, ஞானநிட்டை கூடி நகரத் தூய்மைப்படுத்திய பெரியார் ஒருவருடைய பூதவுடற் சமாதி பாழுற்றுக் காட்சியளிக்கிறது. அந்தக் கேலி சொல்ல நா எழவில்லை. சிந்திக்கவும் எண்ணம் தடைபடுகிறது. தகுதிவாய்ந்த தாயின் சேயாக, அச்சமாதி மாறினல், நாட்டிலே பல நலங்கள் கொழிக்கும். சாதகமான ஒன்றை அமைத்துப் பாதகமான வழியில் பொருளீட்டிச் சொகுசான வழியில் வாழ எண்ணங்கொள்ளும். பிற்போக்காளர்களால்தான் எல்லாம் அழிகிறது. அங்ஙனம் இன்று நாட்டிலே அழிகின்ற கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் எண்ணில. அறிஞரானேர் கண் விழிப்புடனிருந்து கண்காணிப்பார்களாக! வாழ்க சேஷாத்திரி சுவாமிகள் திருநாமம்! வளர்க அவர் கொண்ட ஆத்ம விசாரணை நாட்டிலே!

9. ஒழிபு

ஆடித்திங்கள் சுவாதித் திருநாள்

சேக்கிழார் திருக்கூட்டத்தார் முன்னமே சித்தாந்தத்தில் வெளியிட்டபடி திருவஞ்சைக்களத்தில் ஆடி, சுவாதித் திருநாளை முறைப்படி நடத்துவதற்காக ஒரு நாள் முந்தியே கோவையிலிருந்து புறப்பட்டார்கள். தலைவர் சிவக்கவிமணியவர்களும், தேவார ஆசிரியர் – ஓதுவார்களுடனும், அக்கம் பக்கத்திலிருந்து ஏறத்தாழ 75 அன்பர்களும், அந்தத் தலத்தில் வந்து கூடினார்கள். கொச்சி ராச்சியத்துத் தேவஸ்வம் தலைவரும் நேரில் வந்து இருந்து திருநாளை நடத்தி வைத்தார்கள். இரவும் பகலுமாக ஓயாமல் மழைபெய்தும் திருநாட் சிறப்பு ஒரு சிறிதும் குறைவுபடாமல் நிறைவேறியது. மாகேசுர பூசைக்கு வேண்டிய சாமான்கள் கோவையிலிருந்தே எடுத்துச் செல்லப்பட்டன. வழிபாட்டுச் செலவுகளுக்குத் திருக்கூட்டத்து அன்பர்கள் எல்லோரும் தந்த சந்தாத் தொகையோடு கொச்சி அரசியலார் உத்திரவிட்ட தொகையும், திருப்பனந்தாள் காசி மடத்துச் சுவாமிகள் அனுப்பிய தொகையும் பயன்படுத்தப்பட்டன. திருநாளுக்கு வந்த மக்கள் யாதொரு கவலையுமின்றி வழிபாட்டில் கலந்துகொள்ள எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. கொடுங்கோளூரிலும், திருவஞ்சைக்களத்திலும் இடவசதிகள் இலவசமாகச் செய்து தரப்பட்டன.

சுவாதித்திருநாள் அன்று காலையில் ஆலய விதிப்படி ஆராதனை நடைபெற்றது. பிறகு திருப்பனந்தாள் மடத்துத் தலைவர் அன்புடன் தந்தருளிய 5000–0–0 ரூபாய் தொகையிலிருந்து கொச்சி அரசியலார் கட்டியிருக்கும் சத்திரம் ஆராதனையுடன், திறந்து வைக்கப்பட்டது. தமிழ் நாட்டிலிருந்து திருவஞ்சைக்களத்திற்கு யாத்திரை செல்லும் தமிழ் மக்களுக்கு ஏற்ற வசதியாக இம்மடம் கட்டுவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் அந்தத் தலத்திற்கு யாத்திரையாகச் செல்லும் தமிழ் மக்களுக்கு யாதொரு தடையும் ஏற்பட வகையில்லை. தமிழ் மக்களின் நன்றி சுவாமிகளுக்கு உரித்தாகியிருக்கின்றது.

திருவஞ்சைக்களத்து அப்பனுக்கு முதலில் அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன. அப்போது தேவாராதிகள்

ஓதப்பட்டன. பிறகு அம்மன், நடராசப்பெருமான், பரிவார தேவதைகள் முதலியோர்க்கெல்லாம் ஆராதனைகள் நடைபெற்றன. முதல் பிரகாரத்தில் தென்மேற்குத் திசையில் ஒரு சிறு கருவறையில் சுந்தரமூர்த்திகளும், சேரமான் பெருமானும் ஒரே பீடத்தில் எழுந்தருளியிருக்கின்றார்கள். இம் மூர்த்திகளுக்குச் சிறப்பாக அபிடேக ஆராதனை நடைபெற்றது.

அதுபோது அவ்விரண்டு அடியார்களுடைய சரித வரலாறுகள் கூறப்பட்டன. கோவைகிழார் தமிழில் சொல்ல, பௌராணிகர் இராகவையர் மலையாளத்தில் தெளிவாக மொழி பெயர்த்துக் கூறினார். வந்திருந்த ஆண் பெண் அன்பர்கள் எல்லோரும் கேட்டு மகிழ்ந்தார்கள். அபிடேக, ஆராதனை முடிவடையப் பிற்பகல் 2½ மணி ஆயிற்று. ஆலயத்துச் சிறந்த பகுதிகளோடு அன்பர்களும் படம் பிடிக்கப்பட்டார்கள். பிறகு மாகேசுவர பூசை ஊட்டுப்பிறையில் அறுசுவையுடன் நிகழ்த்தப்பட்டது. பிறகு வந்த அன்பர்கள் சிறிதுநேரம் இளைப்பாறினார்கள்.

இவைகளுக்கிடையில், வந்திருந்த அன்பர்கள் குலசேகராழ்வார் எழுந்தருளியிருந்த திருக்குலச்சேகரபுரத்து ஆலயத்தையும் சேக்கிழார் பெருமான் அரண்மனையிருந்த சேரமான் பரம்பையும், டச்சுக்காரர் கட்டியிருந்த பழைய கோட்டையையும் பார்க்கச் சென்றார்கள்.

பிற்பகல் 4½ மணிக்கு ஆண்மக்கள் உயர்தரப் பாடசாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்குத் தலைமை ஆசிரியர் எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். சுவாதித் திருநாளின் பெருமையைப்பற்றிச் சிவக்கவிமணி அவர்கள் தமிழிலும் பள்ளி ஆசிரியர் மலையாளத்திலும் பேசினார்கள். கோவைகிழார் தலைமை உரை கூறினார்கள். அப்போது தேவார இன்னிசைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்குத் திருப்பனந்தாள் ஆதீனத்தால் வழங்கப்பட்ட 150 ரூபாய் பரிசு கொடுக்கப்படும் என்று வெளியிடப்பட்டது. அம்மாணவியின் பெயர் காவேரி அம்மை. சித்தூர் கல்லூரியில் மாணவியாக இருக்கின்றாள். அந்தக் கூட்டத்தில் ஒன்றிரண்டு குறைபாடுகள் கூறப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சித்தூர் கல்லூரி மாணவி மாணவர்களே பரிசுபெறுகிறார்களென்

றும், மற்றக் கல்லூரிப் பிள்ளைகள் பரிசுபெறுவதற்கு வகையில்லாமலிருக்கிறதென்றும், அவ்வகையை ஏற்படுத்துவதற்காகத் தேவாரங்களை மலையாளலிபியில் வெளியிட வேண்டும் என்றும், அப்பிரதிகளைக் கல்லூரிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டன. இந்த அபிப்பிராயம் போற்றத்தக்கது என்று அறிய வேண்டும். தமிழ் தெரியாத மாணவர்களும், தேவாரங்களைப் படித்துப் பாடும்படி செய்வதற்கு இது ஒரு நல்ல பிரசாரம் ஆகும். இதனைக் காசிமடத்தார்களும், கொச்சி அரசியலார்களும் நன்றாகக் கவனிக்க வேண்டும். கொச்சிக்குமட்டுமே அன்றிக் கேரளம் முழுவதற்குமே இது பயன்படும்.

அன்று மாலை அன்பர்கள் எல்லாரும் கொடுங்கோளூர் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பகவதி அம்மனை வழிபட்டார்கள். இப்பகவதியம்மன் கோயில் மிகப்புகழ்பெற்றது. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டதும், செங்குட்டுவனால் பிரதிட்டை செய்யப்பட்டதும் ஆன கண்ணகியின் சிலை இவ்வாலயத்தில் உண்டு என்பர். அப்புனித இடம் தற்போது மூடப்பட்டுள்ளதாம். அதற்கு வெளியில் தான் தற்போது வழிபாடு செய்யப்படும் திருவுருவங்கள் இரண்டு இருக்கின்றன. மேற்கு நோக்கும் உருவம் பகவதி என்பது. தெற்கு நோக்கும் உருவம் காளி என்னப்படும். இவ்வுருவத்திற்கு எட்டுக் கைகள் உண்டு. வீற்றிருக்கும் நிலையில் உருவம் அமைந்திருக்கிறது. அன்பர்கள் இக்கோயிலை வணங்கிவிட்டு மீண்டும் திருவஞ்சைக்களம் சென்றார்கள். இரண்டிற்குமிடையே ஒருகல் தொலைவுதான் இருக்கும்.

இரவு 8 மணிக்குமேல் மறுபடியும், பூசையும் அதற்குப் பின் பல்லக்குப் பவனியும் நடைபெற்றன. மலையாள இன்னியங்கள் ஒலிக்கவும், மங்கையர்கள் விளக்கு ஏந்தவும், அம்பலவாசிகள் சாமரை வீசவும் இறைவன் மூன்று முறை வலம் வந்தார். இறைவனுக்குப் பின் தேவாரங்கள் ஓதப்பட்டன.

கோயில் முழுவதும் மலர்களாலும், திருவிளக்குகளாலும் அணி செய்யப்பட்டிருந்தன. திருவுலா முடிவு பெற்றதும் பள்ளி அறை உற்சவம் நடைபெற்றது. அதுவும் வெகு அமைதியோடு ஒழுங்காக நடைபெற்றது. பிறகும் தேவார இன்னிசை ஓதப்பட்டது. அதன்பின் இருந்த

அன்பர்களுக் கெல்லாம் இரவு உணவு அளிக்கப்பட்டது. அத்துடன் சுவாதித்திருநாள் திருவிழா முடிவடைந்தது. கீழ்நாட்டுக் கோயில்களைப் போல சந்தடியும் இரைச்சலு மின்றித் திருநாள் ஒழுங்காக நடைபெற்றது.

திருவஞ்சைக்களத்து ஆலயத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இருநூறாயிரம் ரூபாயும், பகவதியம்மன் கோவிலுக்கு ஒருநூறாயிரம் ரூபாயும் வருவாய் வருகின்றதாம். இவ் வாலயங்கள் தேவஸ்வம் பகுதியாரால் பராமரிக்கப்படுகின் றன. அருகிலே பார்க்கத்தக்க ஆலயங்கள் ஆவன: இருஞாலக்குடை பரதர் கோயில், ஊரகம் பகவதிகோயில், திருச்சூர் வடக்குநாதர் கோயில், குருவாயூர் கண்ணன் கோயில், திருமூழிக்களம் பெருமாள் கோயில், திருக்காட் கரைப்பெருமாள் கோயில், காலடிச்சங்கரர் கோயில், ஆல் வாய்ச்சிவன் கோயில், திருப்புனற்றுறை அப்பன் கோயில் முதலியன.

பிரிவாற்றாமை

முடித்தானேந்தல்—எம். எ. பாண்டியன் பிள்ளை அவர் கள் இறைவன் திருவடி அடைந்தார்கள். பல ஆண்டுகள் அரசியல் அலுவலாளராய், தாசில்தார் பதவியிலிருந்து, ஓய்வு பெற்று, திருவாரூர்ப் பூங்கோயிலில் அறக்காப்பாள ராக இருந்து, சபாபதி மண்டபம் முதலியவைகளைப் பழுது பார்த்து நன்னிலைமைக்குக் கொண்டுவந்து குடமுழுக்கும் சிறப்பாகச் செய்து வைத்தவர். சைவ ஒழுக்கத்தில் திகழ்ந்து நிர்வாண திட்சையும் பெற்றவர். சித்தியார் பாராயணம் முறையாகச் செய்பவர். மாசி மாதம் ஓர் இரவில் நெஞ்சு விடு தூது பாராயணம் செய்துகொண்டே இறைவன் திரு வடி நீழல் அடைந்தார்கள். கோடிக்கரை அர்த்தோதய புண்ணிய காலத்தில் கடலில் தீர்த்தமாடுவதற்காக நம் முடன் ஈசான சிவாசாரியார் அவர்கள் உடன்வரப் பிள்ளை யவர்களுடன் அளவளாவி யிருக்கும் நல்லிணக்கம் கிடைத்த செய்தி நினைவிற்கு வருகின்றது.

செய்தித் திரட்டு

30 - 7 - 52. இடிகரை வாலீஸ்வரர் கோயில் சுந்தரர் திரு நாள் வெகு சிறப்பாக நடந்தது. பல சொற்பொழிவுகள் நிகழ்த் தப்பட்டன.

3 - 8 - 52. கோவைத் தமிழ்ச்சங்கம் Dr. சுப்பிரமணியம் தலைமையின்கீழ்த் திரு. துரைசாமி அய்யர் "சூடு" என்னும் பொருள்பற்றிப் பேசினர்கள்.

10 - 8 - 52. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் சார்பில் அருள்நெறித் திருக்கூட்டம் நிறுவப் பெற்றது. தமிழ்நாட் டின் பல பக்கங்களிலிருந்தும் பெருமக்கள் வந்திருந்தார்கள். அன்றிரவு, திருப்பத்தூரில் திரு. மெய்யப்ப செட்டியார் தலைமை யில் குன்றக்குடி மகா சன்னிதானம் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பல பெரியார்கள் பேசினர்கள்.

10 - 8 - 52. கோவைத் தமிழ்ச்சங்கம் திரு. நடராச பிள்ளை தலைமையில் திரு. பழனியப்பப் பிள்ளை அவர்கள் "சைவசமயம்" என்பதுபற்றிப் பேசினர்கள்.

17 – 8 – 52. கோவைத் தமிழ்ச் சங்கம்: கோவைகிழார் தலைமையில் திரு. அனந்தரெங்க ராவ் 'தமிழர் பெருமை' என்னும் பொருள்பற்றிப் பேசினர்கள்.

24 - 8 - 52. குன்றக்குடி கிராம அருள்நெறித் திருக்கூட் டம் Dr. G. S. மணியம், M. B. B. S. அவர்கள் தலைமையில் தொடக்கவிழா நடைபெற்றது.

24 - 8 - 52. இராங்கியம் சிதம்பர விநாயகர் கோயில். வள்ளல் - மெய்யப்பசெட்டியார் தலைமையில் குன்றக்குடி மகா சன்னிதானம் அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. வித்வான் - துரைசாமி பிள்ளை முதலியோர்கள் பேசினர்கள். மகா சன்னிதானம் ஆசி உரை வழங்கினர்கள்.

24 - 8 - 52. அருள்நெறித் திருக் கூட்டம் பிள்ளையார் பட்டி 'விநாயகர் வழிபாடு' என்பதைப்பற்றித் திரு. முத்து வேங்கடாசலம் ஐயர் பேச, குன்றக்குடி மகா சன்னிதானம் ஆசி வழங்கினர்கள்.

24 - 8 - 52. கோவைத் தமிழ்ச் சங்கம் மூத்த பிள்ளையார் திருவிழா ஆராதனை நடிசைகிழார் அவர்கள் தலைமையில் கோவை கிழார் "பிள்ளையார்" என்பதைப்பற்றிப் பேசினார்கள்.

27 - 8 - 52. இடிகரை வில்லீசர் ஆலயம் அப்பர்சுவாமிகள் திருவுருவத் தாபனம் கோவைகிழார் தலைமையில் டாக்டர் சுப்பிரமணியம் அப்பர் வரலாற்றைப்பற்றிப் பேசினார்கள்.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை : சித்தாந்தப் பேராசிரியர் - ந. சிவகுருநாத பிள்ளை அவர்களின் எண்பதாவது ஆண்டு பிறப்புநாள் விழா, திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள் தலைமையில் 25–7–52ல் நடைபெற்றது. இவ்விழாவில் பல உள்ளூர் — வெளியூர்க் கழகங்கள் கலந்துகொண்டன. திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் ஆசிரியர் அவர்கட்குப் பொன்னாடை வழங்கப்பெற்றது பல அன்பர்களுக்குப் போர்வையால் பட்டங்களும் வழங்கப்பெற்றன.

சைதை திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம் : கழக ஆறுவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டியும், பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டும் 23–8–52 சனி மாலை 6-30 மணிக்குத் திருக்காரணீச்சுவரர் திருக்கோயிலில் திரு. முருக. கிருபாநந்தவாரியார் அவர்கள் " செந்தமிழின்பமும் கந்தரநுபூதியும் " எனும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். 'கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்ப' மொழியும் அவர்களின் பேருரையை அன்பர்கள் ஆயிரக்கணக்கில் கேட்டு மகிழ்ந்தனர்.

விரிவுரையின்போது வாரியார் அவர்களின் வாழ்த்துரையோடு திருநெறித் தமிழிசைச் செல்வர் - திரு. த. கூத்தரசு அவர்களை ஆசிரியராகக் கொண்டு சிறுமியர்களுக்குக் கட்டணமற்ற தேவார இசைப்பயிற்சி வகுப்பு ஒன்று தொடங்கப்பெற்றது.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.